REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னுகம், சர்வதாரி கார்த். ௨௦ (சாந்தி ஆண்டு 80) 5-12-'48, ஞாயிறு | இதழ் 20

உலகக் குழந்தைகளுக்காக:
நீங்கள் செய்யும் உதவி



தாராளமாகப்
பணம் உதவுதல்

# துரத்தியடிக்கக்கூடாது!

## பாரதநாட்டின் கோரிக்கை

**இலங்கை வாழ் இந்தியர்களின் பிரஜா உரிமை பற்றி இந்திய அரசாங்கத்துக்கும், இலங்கை அரசாங்கத்துக்குமிடையே நடைபெற்ற கடிதப் போக்கு வரத்துக்கள் சென்ற வெள்ளிக்கிழமை (26-11-48) இருநாடுகளிலும் வெளியாயின.**

**கொழும்பிலே அன்றிரவு கூட்டப்பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டின்போது, வெளிநாட்டு விவகாரங்களின் நிரந்தர காரியதரிசி, ஸ்ரீ கே. வைத்தியநாதனும், சமாச்சாரப்பகுதித் தலைவர் ஸ்ரீ ஏச். ஏ. ஜே. ஹுலுகல அவர்களும் பிரசன்னமாயிருந்தனர்.**

இலங்கையிலுள்ள இந்தியர்களுக்கு எவ்வளவு சலுகைகள் கொடுக்க முடியுமோ, அவ்வளவையும் இலங்கை அரசாங்கம் தயங்காமற் கொடுத்திருக்கின்றதென பிரதமர் சேனநாயகா, இந்தியப் பிரதமர் நேரு அவர்களுக்கு எழுதிய கடிதமொன்றிற் குறிப்பிட்டிருக்கின்றார்.

### நேருஜி யோசனை

இந்தியப் பிரஜா உரிமை மசோதாவின்படி விவாகமாகாதவர்களாயின் பத்துவருடகாலமும், விவாகமானவர்களாயின் ஏழுவருடகாலமும் இலங்கையில் வசித்திருப்பின் பிரஜா உரிமைக்கு அருகதையாகின்றனர்.

நேருஜி தமது கடிதமொன்றில் இலங்கையில் ஏழு வருடகாலம் வசித்த இந்தியர்களுக்குப் பிரஜா உரிமை கொடுக்கலாமேயெனத் தமது மனக்கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

இரு பிரதமர்களின் கடிதங்களைப் படித்தபின்னர் இலங்கையிலும், இந்தியாவிலுமுள்ள பத்திரிகைகள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ளன.

இது நியாயத்தினின்றும் உருவான ஒரு இணக்கம் என சிலோன் டெய்லி நியூஸ் எழுதியது.

"கடிதத்திற் காணப்படுவது போலன்றி நடைமுறையில் இலங்கை அரசாங்கம் தாராளமாக நடந்துகொள்ளும்வரையில் விஷயங்கள் நடைபெறக்கூடும். காலதாமதம் ஏற்பட்டவிடத்தும் புத்தி உதயமாகுமாயின் அது வரவேற்கத்தக்கதுதான்" என டைம்ஸ் ஒவ் சிலோன் எழுதுகின்றது.

### சென்னைத் தினசரிகள்

தென்னிந்தியாவிலிருந்து வெளியாகும் ஆங்கில தமிழ்த் தினசரிப் பத்திரிகைகள் மிகமோசமாக இலங்கை அரசாங்கத்தைக் கண்டித்துள்ளன. வழக்கமாகவே புரட்சியை விரும்பாத சென்னை ஹிந்து இதுவிஷயமாக எரிந்து புகைகின்றது. "இது இந்தியர்களை நாட்டினின்றும் வெளியேற்றும் மசோதாவேயன்றி இந்தியர்களுக்குப் பிரஜா உரிமைகள் வழங்கும் மசோதாவன்று. ஆகவே பண்டித ஜவஹர்லால் நேரு இம் மசோதாவைக் குறித்து ஆலோசிக்க மறுத்தது நாதனமன்று.... இலங்கையின் பிரஜைகளாகிக் கொள்ள முடியாத இந்தியர்கள் கசக்கிப் பிழிந்த எலுமிச்சங் கோதுபோல அத்தீவினின்றும் எறியப்படுவார்கள்....." என ஹிந்து காரசாரமாக எழுதுகின்றது.

சென்னைத் தினசரி இலங்கையை எச்சரிக்கை செய்து வைக்கின்றது. இலங்கையின் போக்கு என்ற ஆசிரியத் தலையங்கத்தில் அது எழுதுவதாவது: "........இந்தியர் செய்த நன்றியை மறந்து இந்தியரை விரட்டி விடப் பார்ப்பதில் தனக்கு நஷ்டம் எதுவும் இல்லை என்பது இலங்கை சர்க்காரின் எண்ணமாயிருக்கலாம். ஆனல் இந்தியாவின் விரோததால் இலங்கை அடைய நேரும் நஷ்டமும் நாசமும் சாமாண்யமானதல்ல....... இந்திய சர்க்கார் கேட்ட நியாயத்தை ஏற்க மறுத்துவிட்டாலும் அதில்

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

## சேர் பொன். இராமநாதன் நினைவு

நவாலியூர் சோ. நடராஜன்

I

இராகம் : காபி ஆதி : தாளம்

பல்லவி

நாதனே உனது நினைவு நிறைந்தது
நல்ல வாழ்வு தருவாய் — அரே ராம — நாதனே

அநுபல்லவி

உய்ய வேண்டியெமக் கையனே தினமும்
செய்த சேவைகளோ கையிலாமலகம் — நாதனே

சரணம்

தீன தயாளுநீ செந்தமிழ் வள்ளல்நீ
தேச விளக்குநீ தெய்வநீ வாழ்வுநீ
அறிவு கொடுத்தெமை யாண்டவ னியலால்
சிறுமை கெடுத்துநாம் சிறந்திட லாகுமோ — நாதனே

II

இராகம் : கானடா ஆதி : தாளம்

பல்லவி

துன்பமென்ப தில்லையே — உலகினில்
துன்பமென்ப தில்லையே

அநுபல்லவி

இன்ப முலகினில் எங்கும் பரக்கப்பொன்
னம்பல ராமன்போல்அமர னிருந்திடில் — துன்பமென்ப

சரணம்

சென்னி முடிமணி சைவ சிகாமணி
மன்னு மரசியல் மன்றி லொருமணி
உன்னை நினைந்துநாம் உய்யவழி தந்தாய்
இன்னு மெமக்கிசை உன்னை நினைந்துதான் — துன்ப

# மின்னி முழங்கிற்று!

## கணக்குப் பரிசோதனை

2-12-48

**அசலான இடிமுழக்கமும், அருமையான மழையும் என்றுதான், செவ்வாய்க்கிழமை இரவு பொழிந்து கொட்டிய மழையைப்பற்றி எழுதவேண்டியிருக்கின்றது.**

வழக்கம்போல அன்பர்களுடன் கூடிப் பேசிவிட்டு, இராப்போசனத்தையும் முடித்துக்கொண்டு டைம்ஸ் பத்திரிகையைப் படிக்கலானேன். நடுப்பக்கத்தைத் தட்டும்போது கண்களை வெட்டும் மின்னற் கீற்றுகள் பளீச் பளீச் பளீச்சென இடி முழக்கத்துடன் படபடவென்று தோன்றித் தோன்றி மறைந்தன. மழையும் சோனவாரியாக இறைத்தவண்ணமாகவேயிருந்தது. 8-45 மணிக்கு மழையின் உக்கிரம் அதிகரிக்கத் தொடங்கி, ஒரு மணித்தியாலத்தில் உச்ச நிலையை அடைந்தது. இப்படிக் கனமான மழையைக் கொழும்பு சமீபத்திற் கண்குளிரக் கண்டதேயில்லை. வட்டி குட்டியாவுஞ் சேர்த்து அன்று வருணபகவான் வாரி வழங்கினர் மாரியை. அன்று நாலு அங்குலத்துக்கு மேலான மழை பொழிந்ததெனத் தெரிகின்றது.

### கிறிஸ்மஸ்

கிறிஸ்மஸ் விழாவுக்கு இன்னுஞ் சரியாக 22 தினங்கள் இருக்கின்றன. இம்மாதம் முதலாந் திகதியுடனேயே அவ்விழாவை முன்னிட்டுப் பலருக்குக் குதூகலம் பிறந்துவிட்டது. புறக்கோட்டைகளிலுள்ள பெரிய வியாபார நிலையங்கள் அலங்கார ஜோடனைகளுடனும் கவர்ச்சியான பொருள்களுடனும் காட்சி தருகின்றன. சிறு பிள்ளைகளுக்கான விளையாட்டுச் சாமான்கள் இவ்வருடம் மலைபோற் குவிந்து கிடக்கின்றன. அமெரிக்கப் புடவை ரகங்கள் இதமான வர்ண ஜாலங்களுடன் பெண்மணிகளுக்கு ஜாடை காட்டுகின்றன.

பருப்பில்லாத கலியாணமும் ஒரு கலியாணமா என்று கூறுவதை நாங்கள் கேட்டிருக்கின்றோம்: அதேபோன்று 'கேக்' என்னு சொல்லப்படும் மதுரமான கோதுமைப் பணியாரம் இல்லாத கிறிஸ்மஸ் ஒரு கிறிஸ்மஸ் ஆகமாட்டாது. ஆகவே, பெண்மணிகள் இதற்கு வேண்டிய, சர்க்கரை, வெண்ணை, முந்திரிப்பருப்பு வாசனைத் திரவியங்கள் போன்ற சாமான்களை வாங்குவதில் மிகுந்த உற்சாகத்துடன் வியாபார நிலையங்களின் படிக்கட்டுகளைத் தாண்டித் திரிகின்றனர்.

### [illegible]

1946-47 வருடத்துக்கான கணக்குப் பரிசோதனை அறிக்கை புதன்கிழமை வெளியாயிற்று. 101 பக்கங்கள் கொண்ட இந்த அரசாங்க அறிக்கையின் விலை ரூபா 2-10 ஆகும். பொதுச்சபைப் பாதுகாப்புப்பற்றி 186 கேள்விகளுக்கு இன்னும் திருப்திகரமான பதில் கிடைக்கவில்லையெனக் கணக்குப் பரிசோதனைப் பகுதித் தலைவர் ஈ. அலென் சிமித் அவர்கள் தெரிவிக்கின்றார். சுதந்திரம் பெருத இலங்கையில் நடைபெற்ற காரியங்களைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு வீர சுதந்திரம் பெற்ற ஸ்ரீ லங்காவுடன் எதற்காகச் சருவிக்கொள்ளவேண்டுமோ தெரியவில்லை. தவிர பொதுசன பாதுகாப்புத் தலைவராகக் கடமையாற்றிய சேர் ஒலிவர் கூட இப்போது இலங்கையிலே இல்லை. கட்டிவிட்ட பூனையை அவிழ்த்துவிட்டு 'வாஸ் வாஸ்' என்பதுபோல, மந்திரியாக இருந்த அப்பெரியாரைச் சீமைக்கு அனுப்பிவிட்டுப் பழைய விஷயங்களை ஆராய்வது எப்படியிருக்கின்றதென்றல் 'பாபர் சாய்ப்பு'க் குப்பைகளைக் கிண்டிக் கிளறுவது போலவேயிருக்கின்றது!




### 'ரேடியோ' சண்டை!

கொழும்பு வானெலி நிலையத்துத் தமிழ் நிகழ்ச்சிகளின் உதவியாளராக மலையாளத்துப் பெண்மணியை அரசாங்கம் நியமித்திருப்பதைப் பற்றியும் இதனை ஆட்சேபித்துக் கொழும்பு விவேகானந்த சபை எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளைப் பற்றியும் 14-11-48 ஈழகேசரி இதழில் எழுதியிருந்தேன். அதன் பின்னரே இங்குள்ள தினசரிப் பத்திரிகைகள் அச்செய்தியை விபரமாகப் பிரசுரித்தன.

இதுவிஷயம் விவேகானந்த சபையிலுள்ள வேறு சில அங்கத்தவர்களுக்குப் பிடிக்கவில்லையாம். ஆகவே, 'ரேடியோ' சண்டையைக் கிளப்பியுள்ள குறித்த சபையின் அங்கத்தினர் சிலர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென வேறு சில அங்கத்தினர் முயற்சி செய்கின்றர் என அறிகின்றேன்.

இதைத் தொடர்ந்து இங்குள்ள சில தினசரிகளிற் குறித்த மலையாளப் பெண்மணியின் கலைத்திறனைப் பற்றியும் சங்கீத ஞானத்தைப் பற்றியும் கடிதங்கள் வெளியாகி வருகின்றன!

### கலை வளர்க்கின்றனர்!

உண்மை யாதெனில் இப்போது பெயருக்கும் புகழுக்குமாக ஒரு சில பண்பாடற்ற கலைஞர்கள், (சிங்களர் தமிழர், ஏனையோர்) கலை வளர்க்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கை ராமகிருஷ்ண சங்கம்

## விபுலாநந்த அடிகளார் ஞாபகார்த்த மண்டப நிதி

## ஒரு வேண்டுகோள்

அன்புடையீர்,

அருட்டிரு விபுலாநந்த அடிகளார் தாம் அநுபவவாயிலாகக் கண்ட பேருண்மைகளை அழகு ஒழுக எழுதிப் பார்த்து எழுப்பிய பள்ளி சிவாநந்த வித்தியாலயம். அவர்களின் உயிர் நிலையம் இக் கலைக்கோயில். இச் செல்வ நிலையத்தின் அருகாமையில் ஊனக்கண் மறைந்தொழிய சமாதியில் ஞானக்கண் கொண்டு நின்று நோக்குவர் அடிகளார். அவர்களது சுருங்கிய கால எல்லைக்குள் சென்றது பல தேசம், உவப்பத் தலைகூடி மகிழ்ந்தது பல அன்பர்கள், புலவர்கள், புரவலர்கள் மாணவர்கள் மத்தியில், கால எல்லையும் தேச எல்லையும் கடந்து சமயத்துக்கும் முக்கியமாகத் தமிழன்னைக்கும் அவர் தம் உயிர் உடல் பொருள் முழுவதும் அர்ப்பணம் செய்து சலியாது தொண்டு செய்த அருமையையும் பெருமையையும் பண்பாடுள்ள மக்கள் அனைவரும் நன்கறிவர். இப் பெருந்தகைக்காக தக்க இடத்தில் ஞாபகச்சின்ன மண்டபம் அமைத்து அவர்கள் எந்நோக்கங்களுக்காகவும் உண்மைகளுக்காகவும் உழைத்து மறைந்தனரோ அவை அனைத்தும் நின்று நிலவச்செய்வது நமது கடமை. தமிழ் நாட்டுக்கும் ஈழத்துக்கும், பொதுவாக எல்லாராலும் விரும்பத்தக்க இடமொன்றுளதேல் அது அடிகளார் அறுதியில் கொள்ள அமர்ந்திருக்கும் இடம், அவர்களுடைய செழுங்கலை நியமம், சிவாநந்த வித்தியாலயம் செழித்து வளரும் இடம், மட்டக்களப்பாகும். நம் தமிழ் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட முனிவருக்கு இங்கு ஒரு மண்டபம் கட்டுவோம். இம் மண்டபத்தில் அடிகளார் சிலைநடமாடக் காண்போம். தமிழ் நூல் நிலையமும் வாசிகசாலையும் இடுவோம். இப் பெருந் தொழிலுக்கு வேண்டியன செய்வோம். அண்மையில் சென்னைக் கல்வி மந்திரியார் திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியாரவர்கள் அத்திவாரக்கல் நாட்டிய பெருமையும், கவர்னர் ஜெனரல் திரு. ராஜகோபாலாச்சாரி அவர்கள் வாழ்த்துகள் பெற்ற அருமையும் கொண்ட இப் புனித ஞாபகசின்னம் மக்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமெனத் திகழ வேண்டுதல் செய்வோம். பொருட்களையும் முயற்சிகளையும் பல இடங்களில் சிதறவிடாது ஓரிடத்தில் ஒருங்குசேர்த்து மிகச்சிறந்த சின்னமமைப்போம். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று வாழ்ந்து காட்டிய பெருமகனார்க்கு அவர்தம் உயிர்நிலையமாகிய வித்தியாலயத்துக்குப் பக்கத்தில் 60,000 ரூபாய் பெறுமதியுள்ள மண்டபம் நிறுவ எண்ணம். இதற்காக அன்பர்களே, தங்கள் பொருளுதவியை மிகத் தயவுடன் வேண்டுகிறோம். 'செல்வத்துப் பயனே ஈதல்" என்னும் தமிழ்மாபில் வாழ்கின்ற செல்வர்களே, பொற்குவைகளும், காசுகளும் தாரீர். அன்பர்கள் உள்ளம் உவப்ப உதவும் பெரும்பொருளுதவிகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். வாழ்க தமிழகம், வாழ்க தமிழ் மக்கள், வாழ்க விபுலாநந்தன்.



உங்கள் நல்லாதரவு வேண்டும்,

**சுவாமி சித்தாத்மாநந்தா**
இராமகிருஷ்ண சங்கத் தலைவர்

**சுவாமி நடராஜாநந்தா**
இராமகிருஷ்ணசங்கப் பாடசாலைகளின் முகாமைக்காரர்

**ச. அம்பலவாணர்**
சிவாநந்த வித்தியாலயத் தலைமையாசிரியர்

இராமகிருஷ்ண சங்கம்
மட்டக்களப்பு
15-11-48

நன்கொடைப்பணம் அனுப்பும் விலாசம்:
**சுவாமி நடராஜாநந்தா**
இராமகிருஷ்ணசங்கப் பாடசாலைகளின் முகாமைக்காரர்
இராமகிருஷ்ண சங்கம், மட்டக்களப்பு

## காந்தி நெறி

~ அன்புதாசன் ~

மாந்தர்க் குள்ளே ஒருதெய்வம்—அந்த
மகாத்மா வகுத்தநல் வாழ்வுநெறி
சாந்தி நிலவ உலகமெலாம்—மிகு
சக்தி படைக்கும் செம்மைநெறி

கொடிய விலங்கும் தலைவணங்கும்—அலை
குமுறும் புயலும் அமைதிபெறும்
மடமை இருளும் மாண்டொழியும்—அருள்
மகாத்மா அஹிம்சைப் பெருவழியால்.

அன்பு தழைக்கும், அறம்ஓங்கும்—உயர்
அறிவு மணக்கும் அருள் கனியும்
இன்பம் செழிக்கும் உலகெங்கும்—அவன்
எந்தை காந்தி வழியாலே.

சாதி சமய நிறபேதச்—சவர்ச்
சண்டை யொழித்து சகமெங்கும்
ஜோதி யின்பச் சுகவாழ்வில்—ஒளி
துலங்கும் காந்தி நெறிவாழ்க!

எண்ணற் கரிய வலிமையுடன்—இங்கு
இதய பூர்வத் தொடுபகையை
மன்னித் திடுநல் அஹிம்சையெனும்—எங்கள்
மகாத்மா அளித்த வழிசெல்வோம்!


சிறந்த பலனுக்கு

**C. C. C. புகையிலைப்பசளை**

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும்போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

**C. C. C.**

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி
லிமிற்றெட்

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது]

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்.

The
**Colombo Commercial Company**
LIMITED.

INCORPORATED IN GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"வீட்டை விளங்கச் செய்வது பெரிய மின்மினி விளக்குகளா?......அல்ல; அல்ல......."

# வள்ளுவரின் பெண்ணுலகு

வள்ளுவர் படைத்த பெண்ணுலகு எத்தகையது? சிறந்தது; உயர்ந்தது. இன்னும் மனிதனால் காணப்படாதது. செவ்வாய் மண்டலத்தைக் கண்டபிறகும், மனிதன் செந்நாப்போதாரின் பெண்ணுலகைக்காண முயற்சி செய்ய வேண்டியிருக்கலாம்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள? எனப் பெருமிதமடைகிறார். மனிதன் புகழை விரும்புகிறான்; அறிவை நாடுகின்றான்: இன்பத்தைக்காண ஏங்குகிறான். அமெரிக்காவில் அரசுத்தலைவனாகவோ (ஜனாதிபதி), இந்தியாவுக்கு ஒரு பண்டித நேருவாகவோ ஆய்விட்டால், அதைவிடச் சிறந்த பேறு இல்லை என எண்ணுகிறான். அவற்றை யடைவதை விட மிகச் சிறந்த பேறுகப் பெண்ணை; கற்புடைய பெண்ணைக் கருதுகிறார் வள்ளுவர்.

"கற்பென்னுந் திண்மையுண்டாகப் பெறின்" தானே அவர் போற்றுகிறார். இல்லையிடில் பெண்களை இழிவாகத் தானே கருதுகிறார் எனக் கேட்கலாம். ஆம்; ஆண்மையில்லாதவனை ஆணாகவோ, மனிதத்தன்மை யற்றவனை மனிதனாகவோ யார்தான் கருதுவர்; கருதித்தான் யாது பயன்? அதுபோல, கற்பென் (பெண்மை) னும் திண்மை யற்றவள் மண்ணல்லவா! மற்றும், ஒருசொல்லையோ, பொருளையோ கூறும்போது, அதன் தன்மை (இலக்கணம்) யைக் கூறி விளக்குதல் வள்ளுவர் இயற்கை. உள்ளுவது (நினைப்பது) மனதால்தானே முடியும்? ஆனாலும் உள்ளத்தால் உள்ளலும் தீதே என்பார். வற்புறுத்துதற்காக. அதேபோலத்தான் 'கற்பென்னும் திண்மை யுண்டாகப் பெறின்' என விளக்குகிறார். அன்றி, இன்னும் ஆண்மையற்ற ஆண்களையும், பெண்மை (கற்பு) யற்ற பெண்களையும் முன்னரே அறிந்தோ என்னமோ, பெண்களைப் பேசுகையில் கற்பென்னும் அவர்கள் இயல்பினை; திண்மையை நினைவூட்டிப் போற்றுகிறார்.

### உயிரை மதித்தல்

உயிரைச் சிறந்ததாகக் கருதாத மனிதன் உலகிலில்லை. அறிவுடையவன்யாவும் அடைவான் என வள்ளுவர் நினைப்பதுபோல, உயிரோடிருந்தால் நாம் விரும்பு மெதனையுஞ் செய்து முடிக்கலாம் என, எப்படியாவது உயிரைக் காக்கிறான் மனிதன். அத்தனை அருமையாக சிறந்ததாக அதனை மதிக்கிறான் அல்லவா? அந்த அருமை உயிரே காதலி (பெண்) என்கிறார் வள்ளுவர். காதலனுக்கும் காதலிக்குமுள்ள உறவு 'உடம்போடுயிரிடை யன்ன' என்கிறார். இதைவிடப் பெண்ணிற்கு என்ன பெருமை தரச் சொல்கிறீர்கள்; உங்களால் தரமுடியும்?

உயிரென நினைத்ததோடு ஓய்ந்துவிடுகிறாரா? 'வாழ்தல் உயிர்க் கன்னள் ஆயிழை' எனத் தனது வாழ்க்கையே அவள், என ஒப்படைக்கிறார். அதனுற்றானே, 'இல்லதென் இல்லவள் மாண்பானால்' என்கிறார். கற்புடைய காதலியிருந்தால் அதுவே 'முழுவாழ்க்கை' என்கிறார்.

இன்னும் 'கருமணியிற் பாவாய் நீ போதாயாம்' என அவளைக் கண்ணாய், கண்ணுள் மணியாய் வைத்துக் காக்கிறார். கண்ணற்றவன் வாழ்வே கரு நஞ்சன்றோ. பெண்ணற்ற உலகு அவர்க்குப் பேரிருளாக பெரு நஞ்சாகவே காட்சி யளிக்கின்றது!

### தெய்வப் பெண்

கடைசியாகக் காதலியை பெண்ணைக் கடவுளாக ஆக்கிவிடுகிறார். நாவு மறக்கினும், நமச்சிவாயத்தை நான் மறவேனே, என்றமாதிரி, 'உள்ளுவன் மன்யான் மறப்பின், மறப்பறியேன்' என்கிறார். மறந்தாலல்லவோ, நினைப்பது. 'எப்போதும் இவளே நினைப்பாக இருக்கிறேனே' என்கிறார். என்றும் எண்ணியிருக்கத் தக்கது கடவுள்தானே. பெண்ணும் அப்படித்தான் என்கிறது குறள்.

இவற்றைவிட என்ன பெருமை; என்ன உரிமை கொடுப்பீர்கள்? பெண் உலகின் உயிர்; கண்கள்; வாழ்வு; என்றும் கருதியிருக்க வேண்டிய கடவுள். ஆ! பெண்ணிற் பெருந்தக்க யாவுள? என, பெண்மை வாழ்கென்று கூத்திடுகிறார் வள்ளுவர்.

ஏன் உயிரென உணர்கிறார்; மறவாமல் மதிக்கிறார்? 'ஒள்ளமர்க் கண்ணாள்' குணம் என்கிறாரே அந்தக்குணத்தை; கற்பை; பெண்மையைக்கண்டுதான்.

அந்தப் பெண்மை இன்று இருக்கின்றதா? அடக்கமாகச் சொல்கிறேன் இல்லை. பிற ஆடவனை விழையாப் பெருமையே பெண்மைஎனக் கருதிவிடக் கூடாது. அதுமட்டுமல்ல; வள்ளுவர்கூறும் பெண்ணியல்பத்தனையும் இருந்தாலன்றி, 'அங்கு பெண்மை' இல்லை.

வள்ளுவர் முதன்மையாகக் கூறிய பெண்ணிலக்கணம் குடும்பத்தில் 'வரவிற் கேற்ற செலவு' இன்று உரிமை கேட்கும்; நாகரீகமுடைய பெண்களிடம் அந்த எளிமை சிக்கனம் உண்டா? இல்லை, இல்லை. 5000 ரூபா முதல் 50 ரூபா சம்பளம் வாங்குபவன் வரை 80/100 பேர் ஒவ்வொருமாதமும் வரவுக்கு மிஞ்சியே அதாவது கடனாளியாகவே வாழ்க்கை நடத்துகிறான். இதற்கு யார் பொறுப்பாளி? 5000-க்கு, 500 ரூபா வேனும் மீதஞ் செய்யாவிடில் அது குடும்பமல்ல; வரவுஞ் செலவும் ஒன்றாகவேனு முள்ளது. வரவினும் செலவு மிகுதியானால் அது குடும்பமா? அதை இல்லாளென இறுமாப்புடன் நடத்துவது பெண்ணா? இல்லை! இல்லை !!!

### வீண் செலவு

'அளவறிந்து வாழாத வாழ்க்கை' இருப்பதுபோலத் தோன்றி மறையும் என்கிறார். அப்படி அளவுமிஞ்சிச் செலவிட்டு, குடும்பத்தை [illegible] யில் அழிப்பவளை [illegible] 'பெண்மை' யென்பீர்களோ?

ஆம்; இவ்வழிவிற்குப்பொறுப்புப் பெண்தான். இன்று அவள் விரும்பும் ஆடம்பரத்தில்தான் செலவு மிஞ்சுகிறது! அதுவும் உரிமை, உரிமையெனக் கூப்பாடிடும் பெண்கள் அவர்கள் பிடிவாதஞ்செய்து வேண்டும் உடை, நகை, அழகுப் பொருள்கள்; உணவுவகை; வாழும் வீடு இவையே இன்று வீணாகக் குடும்பச் செலவைக் கொள்ளை

**மு. கோவிந்தசாமி**

யிடுகின்றன! இதற்கு ஆண்களும் பொறுப்பல்லவா? இல்லை.

இல்லாள், மனையாள் என்பது தமிழ் மரபன்றி, இல்லாண், மனையாண் எனல் தமிழ் மரபன்று. ஆகவே, குடும்பத்தை நடத்தும் கடன் அவளிடமே. பொருளை ஈட்டிக் கொடுத்தலே ஆண்கடன். இன்னும், 'இப்படிச் செலவிட்டால் போதும்' எனக் கூறினால், அப்பெண்ணை எதிர்க்கும் ஆண்மகன் இல்லை; இருக்கமாட்டான். இன்று ஆண்மகனும் ஆடம்பரமாக வாழ்கிறானெனில் பெண்ணைப் பார்த்துப் போட்டி. பெண் வழிகாட்டட்டும், இன்று நாயேரும்; குடும்பம் சிறக்கும்!

'ஆகுல நீரபிற' என எந்த ஆடம்பரத்தை வெறுத்தாரோ, அந்த ஆடம்பர வாழ்வே பெண்ணுரிமை யென்றால், அது வள்ளுவர் கூறும் 'பெண்மை' அல்ல; கற்பல்ல; அல்ல!

மற்றது, காதல். மனையாளுக்கும் கணவற்குமுள்ள அன்பு. 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், தற்கொண்டாற்பேணி, எனும்போது அவர் வற்புறுத்த விழைவது, காதலி காதலனிடங் கொள்ளவேண்டிய இயற்கையன்பு; உயிர்க்காதல்.

### பிரிவு எனும் நஞ்சு

இன்று, உரிமைப் பெண்ணிடம் இது இருக்கிறதா? உடனே, பிற ஆடவரிடம் பேசுவதைப் பிழையென்கிறீரோ எனவேண்டாம்! அஃதில்லை. இன்று மணம் புரியும் பெண், இருவரும் பிரிக்க முடியாத ஒன்று; உடலுயிர் என நினைத்தா மாலையிடுகிறாள்? இன்றைய நாகரீகம்; உரிமை அவள் உள்ளத்தே 'பிரிவு' எனும் நஞ்சை யூட்டியது. விரும்பியதும், மணவுறவை அறுத்துக்கொள்ளும் உரிமை நமக்குண்டு என வல்லவா எண்ணிக்கொண்டே மாலையிடுகிறாள்? இந்த பிரிவுணர்ச்சிதான் பெண்மையா, ஈருடல் ஓருயிரா? காதலன் வாணிபச் சரக்கா, என்ன? வேண்டாதபோது, பிடிக்காதபோது விற்றுவிட; விலக்கிவிட! இவளும் விரும்பிய போது, ஏதோ காரணங்கூறி மண உறவை மறுத்துவிடுகிறாள்! இதில், எத்தவிடத்தில் அன்பு; காதல் உண்டு?

இராஜப் பிரதிநிதிக்கும் இந்திய சேனாதிபதிக்குமுள்ள உறவல்லவா இன்றைய நாகரீகக் காதலரிடம் நிலவுவது? [illegible] [illegible] தகராறு வந்தால் தீர்த்துக் கொள்ள நீதிமன்றம் வரையல்லவா போகவேண்டும் போலுள்ளது? தமக்குள் அறிந்து தீர்க்கும் அன்பிருந்தாலன்றோ. அவன் ஏதேனும் கேட்டால், அது பெண்ணுரிமை, நீ கேட்க உரிமையில்லை, வேண்டுமானால் நீதிமன்றம் போ! என்கிறானே! அவன் கேட்டால் 'ஆண் உரிமை' தலையிடாதே என்கிறான். உன் உரிமை எனக்கும் உண்டல்லவா என்கிறான்.

### வேலைக்காரன் பணி

இன்றைய உரிமைப் பெண் சமைப்பது மில்லை; அவள் அன்புக் கைகளால் அவனுக்குச் சோறிடுவதுமில்லை; மற்றக் குடும்பவேலை செய்யவோ, தனி ஆள். தண்ணீர் வேண்டுமானால், வேலைக்காரனைக் கேட்கவேண்டு மன்றி விழையும் காதலியைக் கேட்க முடியாது; இது உரிமை! சாப்பாடு நோமானால், சமையற் காரனைக் கோபிக்கலாமன்றி, சார்ந்த மனைவியைக் கோபிக்க உரிமையில்லை; இது உரிமை. இப்படி, கணவன் — மனைவியின் காதலை வளர்க்குமென எந்தெந்தக் கடமைகளைப் பெரியோர் அமைத்தனரோ, அவற்றையெல்லாம் வேலைக்காரனிடம் விட்டுவிட்டு, எதற்காகத்தான் அன்பு மனையாள்? படுக்கையறை யுறவுதான் மீதியோ? அதிலும், இவன் விழைந்து உள்ளே போகும் போது, அவள் ஏதோ பெண்கள் மகாநாட்டிற்குப் பிரதிநிதியாகப் போய்விடுகிறாள். என்ன உரிமையிது!

'சரிநிகர் சமானமாக வாழும் உரிமை கேட்கும்' இவர்கள், ஆண்கள் பொருள் தேடுகிறார்களே; பகலெல்லாம் பாடுபடுகிறார்களே; அதற்கொப்ப, என்ன செய்கிறார்கள்? எல்லோரும் தொழில் செய்வதில்லை. 5/100 பெண்களே ஆண்களுக்கொப்பத் தொழில் செய்கின்றனர்!

இன்னொரு தொடர்பு குழந்தைத் தொடர்பு. இன்று குழந்தையை முத்தமிட்டு, ஆடிப்பாடி அதன்வழி இருவர்க்கும் இறுகும் அன்பு, காதலி காதலனுக்கும் இடையிலா இருக்க முடிகிறது? வேண்டுமானால், செவிலிக்கும் காதலனுக்குமன்றோ அன்புண்டாக வேண்டியுளது. அது தான், குழந்தையைத் தூக்கினால் சேலை, கோட்டின் மடிப்புக் கலைந்து விடுமென்று செவிலியை வைத்துவிடுகிறார்களே!

குழந்தையால், சோறூட்டியிடுதலால், வேண்டியவிடத்துதவலால், என் காதலின்ப நுகர்ச்சியால் வளரும் அன்பெல்லாம் இன்று 'உரிமை' யென்ற மயக்க மருந்தால் மறக்கப்பட்டு, மறுக்கப்பட்டு, ஏன் மடிக்கப்பட்டுவருகிறது. உண்மைசொல்கிறேன்: இவையல்ல வள்ளுவர் விழைந்த பெண்மை கற்பு. 'தற்கொண்டாற்பேணி' என்றவிடத்து, இவற்றையெல்லாம் அவர் செய்யவேண்டுமென வற்புறுத்துவதாகவே உணர்கிறோம்.

### ஆணுக்கும் கற்பு

இவற்றை யெல்லாம் எடுத்துக் காட்டும்போது எரிச்சல்கொண்ட சில படிப்பாளிகள் பெண்ணுக்கு மட்டுந்தானே வள்ளுவர் கற்பைக் கூறினார் எனக் கேட்டு மடக்குகின்றனர். ஆணுக்கும் கூறினார். 'பிறர்மனை நயவாத' பெரிய ஆண்மையைக் கூறி ஆணுக்கும் 'கற்பு' அதுவே எனக் காட்டினார். தமிழில் மற்றோர் தெளிவுபடுத்தாத இதனைத்தெளிவுபடுத்திய பெருமை வள்ளுவர்க்கேயுண்டு. இதன்வழி குற்றமற்றதோர் கொள்கையைத் தமிழுக்களித்தார். 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்' என, பெண்களைத்தான் ஆண்களுக்கு அடிபணியச் சொல்லுகிறார். ஆண்கள் பணியும்

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

# இராஜாஜி

★

~ யாழ்ப்பாணன் ~

தமிழ்நாடு செய்தபெருந் தவத்தால் வந்தோன்
சத்தியத்துக் கிருப்பிடமாம் தகைமை சான்றோன்
கமழுமுயர் காவியங்கள் கற்றுத் தேர்ந்து
காசினியிற் கரைபுரண்டே கலையாம் வெள்ளம்
அமிழ்தெனவே மடுத்தோரை மூழ்கச் செய்து
அதில்திளைக்க வைத்தவுயர் பெருமை சான்றோன்
இமயமுதற் குமரிவரை பரந்த வெங்கள்
இந்தியநன் னாட்டினையே புரப்பா னின்றே.

முடிகொண்ட மன்னரெலாம் முறையாய் நின்று
மொழிகேட்டுப் பணிசெய்யும் மொய்ம்பு தாங்கிப்
படிகொண்ட பெருமாளும் பரமனும்நின் றருள்புரியும்
பலகோயிற் தலஞ்சிறக்கும் பாரதநன் னாட்டினிலே
குடியிடையார் புகழ்ந்தேத்தத் தோன்றல்களும்
அடிபணியத்
தொன்மைவழி வந்தவுயர் மன்னவரும் அதிசயிக்க
நடுநிலைமை தவறாத மன்னவனாய் நலம்பெருக்கி
நாட்டினைத்தன் கண்ணெனவே காப்பன் மன்னோ.

மதுவருந்திக் குடிகெடுக்கும் மக்களிடை மதுநீக்கி
வகுத்தவுயர் நெறிகளினால் மாக்களெனும் நிலைபோக்கி
நதியொலித்து மணிகொழிக்கும் நாட்டினிடை நல்லாட்சி
நலமோங்க நன்மகனாய் நாற்றிசையும் புகழ்பரப்பி
நிதிபெருக்கித் தரமுயர்த்தி நெடுங்கிரிசேர் பாரதத்தை
நேர்நெறியிற் புரந்தோங்கும் நிறைவள்ளல் ராஜாஜி
பதியெனவே பன்னெடுநாள் பாரினிடம் வாழியவே
பல்லாண்டு பல்லாண்டு வாழியநல் வாழியவே.

அரையினில்நான் முழவேட்டி அகன்மார்பில்
வெண்ணங்கி
அடிகளிலே பாதரட்சை அருங்கரத்தில் வளைகொம்பு
சிரமதனில் சிறுகுடுமி திகழ்முடியங் கில்லாதாய்
செயல்களிலே பெருமிதமும் சிந்தையினில்
ஆய்ந்தறிவும்
விரவியநல் தோற்றமொடும் வீதிகளில் நடந்துசெலும்
மேன்மகனும் ராஜாஜி மெய்த்தவத்தின் விளைவாகும்
சரிநிகரில் எங்கோமான் தலம்புரந்து வாழியவே!
தாய்நாடு தழைத்தோங்க வாழியநல் வாழியவே!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற அரசியல்

## இலங்கையின் அனுபவம்

இலங்கையில் புதிய அரசியற்றிட்டம் ஆரம்பமாகி ஒரு வருடம் கழிந்துவிட்டது. சென்ற வருடம் நவம்பர்மாதம் 25-ம் திகதியே இலங்கைப் பிரதிநிதிகள் சபை முதன் முதல் ஆரம்பமாயிற்று. அதன் பின் தொடர்ந்தாற்போல், உலகமனைத்தும் ஒப்புக்கொண்டோ ஒப்புக்கொள்ளாமலோ இலங்கையும் சுதந்தரமடைந்துவிட்டது. இந்த நிலைமையிற் பிரதிநிதிகள் சபையின் ஆரம்பத்தையும், அதன் வளர்ச்சியையும், இலங்கையில் அவ்வரசியலின் விளைவாக ஏற்பட்ட மாற்றங்களையும் அறிதல் நன்று.

### பாராளுமன்றம்—பிரதிநிதிகள்சபை

பிரதிநிதிகள்சபை சனநாயக ஆட்சியின் முதற் கருவி. இவ்வாட்சிமுறை, உலகில் நாகரிகவளர்ச்சியடைந்த நாடுகளனைத்திலும் இருந்து வருகிற போதிலும், அந்த ஆட்சி முறையை உலகுக்களித்த பெருமை இங்கிலாந்தைச் சேர்ந்ததாகும். இதனாலேயே, இங்கிலாந்திலுள்ள 'பாராளுமன்றம்' தாய்மன்றம் என வழங்கப்படுகின்றது. இங்கிலாந்தின் அரசியலமைப்பின் விசேஷத்தையொட்டி ஆங்கிலேயர் பெருமையடைகின்றனர். இஃது ஓரளவுக்கு ஒப்புக் கொள்ளப்படக்கூடியது தான். ஆங்கிலேயருடைய ஆற்றலினால் அவ்வித அரசியல் ஸ்தாபனம் வளர்ச்சியடைந்ததோ, அன்றி அந்த ஸ்தாபனத்தின் சக்தியால் ஆங்கிலேயர் இவ்வித தீவிரமான சமூக வளர்ச்சியைப் பெற்றனரோ என்று முடிபு செய்வது கஷ்டமானது. இரு பகுதியும் ஒன்றுக்கொன்று ஆதாரமாயிருந்தனவென்று சொல்லலாம். சங்கங்களிலும் கூட்டங்களிலும் கலந்து பேசி விஷயங்களை முடிபுசெய்யும் தன்மை ஆங்கிலேயரிடம் இயல்பாகவே அமைந்திருந்தது.

இங்கிலாந்தின் சரித்திரத்தில் உரோமரின் ஆட்சி, முக்கிய மாறுதலெதையும் கொடுக்கவில்லை; கி. பி. 5-ம் நூற்றுண்டில் சாக்ஸனியர் இங்கிலாந்தைப் படையெடுத்த பின்பே இங்கிலாந்தின் சரித்திரம் உதயமானது. அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இருந்த முக்கிய அரசியல் ஸ்தாபனம் அறிஞர் குழாம் (Witan: அறி எனப் பொருள்படும் 'வித்' என்னும் வடமொழி, யடியுடன் தொடர்புற்ற சொல்) என்பது. அரசர்களைக் கட்டுப்பாடு செய்வதிலும், ஓர் அரசனின் பின்பு மற்ற அரசனைத் தெரிவு செய்வதிலும் இச் சபைக்கு அதிகாரமிருந்தது. 11-ம் நூற்றுண்டில் நோர்மனியர் இங்கிலாந்தை அடிமைப்படுத்தினர். அதிலிருந்து அரசியலமைப்பின் தன்மையும் மாறுதலடைந்தது. நோர்மனியரின் அரசியல் முறை 'ஜமீன்தார் ஆட்சி முறை'யை அடிப்படையாகக் கொண்டது. நோர்மனிய முதலாசனான வில்லியம் மேற்கூறிய 'அறிஞர் குழு'வினால் ஒப்புக்கொள்ளப்பட்டே உரிமையுடைய அரசனானன். அந்தக் குழுவில், முன்போல் கிறீஸ்த குருமாரும் ஏனைய அரசியல் நிர்வாகஸ்தர்களும் மாத்திரமன்றி, அரசனிடம் நிலம் பெற்று ஆட்சி செய்துவந்த பிரபுக்களும் அங்கத்துவம் பெற்றனர். ஆகவே அக் குழு, 'அரசியற் பேராயம்' எனப் பெயர்பெற்று விருத்தியடைந்தது. இந்தச் சபைகளிலேதான் பாராளுமன்றத்தின் ஆரம்பவிதை விதைக்கப்பட்டதெனலாம். இந்தச் சபையும் அரசன் வலிகுன்றியபோது கூடிய அதிகாரமுடையதாயும், அரசன் வலிமையுடையனுயபோது சக்தியற்றதாயும் இயங்கிவந்தது. எவ்வாறுயினும், அரசியலை முற்றுக அரசனிடமே ஒப்படைத்துவிட்டுத் திருப்தியடையாது, தாமும் பெரும்பங்கை அவ்வரசியலில் பெறவேண்டுமென்னும் எண்ணம் ஆங்கில மக்களிடம்

**ச. ஆறுமுகராசா**

அக்காலந்தொட்டே இருந்து வந்ததென்பதை நன்கு மனதிற் பதித்துக்கொள்ளவேண்டும். அரசன் பலவீனமானவனுய் அல்லது கொடுங்கோலனுய் வரும்போது, மக்கள் தம்முரிமைகளைப் பெற்று அவற்றைப் பலப்படுத்திக் கொண்டனர்.

13-ம் நூற்றுண்டில் இவ்வித அரிய சந்தர்ப்பமொன்று கிட்டியது. 'யோன்' என்னும் அரசனுடைய தீய ஆட்சி முறையை எதிர்த்து, பிரபுக்களும் ஏனைய நகரவாசிகளும் ஒன்றுகூடிப் பெரிய சாஸனமொன்றைத் தயார் செய்து, அரசன் அதை ஒப்புக்கொள்ளும்படியும் செய்தனர். அந்தச் சாசனத்தின் முக்கியமான பல விதிகளுள், "அரசன், பாரம்பரியமாகத் தனக்குரிய வரிகளைவிட, வேறெவ்வித வரிகளையும் ஒரு பொதுச் சபையின் அங்கீகாரமின்றி ஏற்படுத்தக் கூடாது" என்பதே பாராளுமன்றத்துக்கு அடிகோலிய விதியாகும். அறிஞர் குழுவிலும் அரசியற் பேராயத்திலும் விதைக்கப்பட்ட அவ்விதை, பெருமை பெற்ற அச் சாசனத்தாற் போஷிக்கப்பட்டு முளைகொண்டு வளர ஆரம்பித்தது. 13-ம் நூற்றுண்டின் இறுதியில், மூன்றுவது ஹென்றியின் ஆட்சியில் ஏற்பட்ட தவறுதல்கள் காரணமாக, மக்கள் ஒன்றுதிரண்டு சைமன் டீ மொன்போட் என்பவன் தலைமையில் சிறந்த பிரதிநிதித்துவம் வாய்ந்த பாராளுமன்றத்தைக் கூட்டினர். அடிமைத் தொழிலாளரைவிட ஏனையோர் அனைவரும்—கிறீஸ்தவகுருமார் உட்பட—இப் பாராளுமன்றத்திற் பங்கு பெற்றனர்.

### பாராளுமன்ற வளர்ச்சி:

பொதுமக்கள் சபை, பிரபுக்கள் சபை எனப் பிரதிநிதித்துவமும், வலிமையும் பெற்ற பாராளுமன்றம், காலத்தின் விசித்திரமான போக்கினுற் போலும், ஹென்றியின் மகனுகிய முதலாம் எட்வேட் அரசனுல் நன்கு பரிபாலிக்கப்பட்டது. அவ்விதமான ஒரு ஸ்தாபனத்தை எதிர்த்து அழிப்பதிலும், அதனைக் கருவியாகக்கொண்டு அரசியலை நடாத்துதலே சிறந்தது என்ற உண்மையை அவ்வரசன் நன்குணர்ந்திருந்தான். அதுவுமன்றித் தான் வகுக்கும் பிரமாணங்களைப் பாராளுமன்றத்தின் மூலமாகச் சட்டமாகச் செய்தவனும் இவனே. இக்காலத்தில் இன்னுமொரு முக்கியமான சம்பவம் நடைபெற்றது [?]. பாராளுமன்றம், பொதுமக்கள்சபை, பிரபுக்கள் சபை என இரு பிரிவாகப் பிரியத் தொடங்கியது. அதிசயமாகவும் இயல்பாகவும் ஏற்பட்ட இப் பிரிவினை மிக ருசிகரமானதுமாகும். சைமன் டீ மொன்போட் கூட்டுவித்ததுபோன்று, பின்வந்த அரசர்களும் பொதுமக்களையும் தங்கள் பாராளுமன்றத்துக்கு அழைத்தார்கள். ஆனால் காரியங்களை நிர்வாகம் செய்யும் பொறுப்பும் அதிகாரமும் பிரபுக்களிடமே யிருந்தன. அரசனுடைய தலைமையிலே பாராளுமன்றம் கூடியிருக்கும்போது, பொதுமக்கள் பின்புறமாக ஒதுங்கி அமைதியாக இருந்தனர். விவாதங்களில் கலந்துகொள்ளும் துணிவு அவர்களுக்கு அப்போது ஏற்படவில்லை. ஆனால் தம் கருத்துக்களையும் பாராளுமன்றத்தில் தெரிவிக்க வேண்டுமென்னும் ஆர்வம் இருந்தது. அதனால், உத்தியோக தோரணையி லன்றிப் புறம்பாக ஓரிடத்தில் பொதுமக்கள் தம்முள் கூடித் தாம் முடிபுசெய்தவற்றைப் பாராளுமன்றத்தில் பேசுவதற்கும் ஒழுங்கு செய்தார்கள். அப்படிப் பேசுவதற்கெனத் தெரியப்பட்டவரே, பொதுமக்கள் சபையின் தலைமையையும் பெற்றூர். அதனாலேயே அவர் இன்றும் "பேச்சாளர்" எனப் பெயர் பெறுகின்றனர்.

இக்காலத்திலும் கூடப் பாராளுமன்றத்தின் பலம் அரசனின் தன்மையைப் பொறுத்ததாகவேயிருந்தது. எனினும் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் தன்னதிகாரத்தைக் காட்டப் பாராளுமன்றம் பின் வாங்கவில்லை. பல முறைகளில் அரசனையும் பாராளுமன்றமே நியமித்தது. முதல் 'ரியூடர்' அரசனுய ஏழாவது ஹென்றியும் பாராளுமன்றத்தின் ஆதரவால் அரசனுயவனன்றி உண்மையில் உரிமையுடைய அரசனல்லன். ஏறக்குறைய இரு நூற்றுண்டுகளாக, 15-ம் நூற்றுண்டுவரை இங்கிலாந்தில் உள்நாட்டுச் சண்டைகளும், நூற்றுண்டு யுத்தமுமே முக்கியமானவையாய் இருந்தன. அதன்பின்பு ரியூடர் காலத்திலும் பாராளுமன்றம் அரசர்களின் கருவியாகவும், பொம்மையாகவுமேயிருந்தது. பின்பு 17-ம் நூற்றுண்டு தொடக்கம் 18-ம் நூற்றுண்டு ஆரம்பம்வரை, பாராளுமன்றம், தன்னதிகாரத்தைப் பெறுவதற்காக அரசருடன் போராடிய காலமாகும். 18-ம் நூற்றுண்டு ஆரம்பத்தில், ஹனேவேரிய அரசர் ஆட்சிதொட்டுப் பாராளுமன்றம் தன்னதிகாரத்தைப் பெற்றுக்கொண்டது. இதற்கு முக்கியகாரணம் அவ்வரசர்களுக்கு ஆங்கிலம் தெரியாமையும், இங்கிலாந்தில் சிரத்தையின்மையுமேயாம்.

இதன்பின்பே படிப்படியாகப் பிரதம மந்திரியும், மந்திரி சபையும், கட்சிமுறையும் ஆரம்பமாய் வளர்ச்சியடைந்தன. கட்சிமுறை ஏற்கனவே ஆரம்பமாய்விட்டது. 1688-ல் நிகழ்ந்த உள்நாட்டுப் புரட்சியுடன் ஸ்ரிவாட் அரசபரம்பரை இங்கிலாந்தினின்றும் அகற்றப்பட்டுவிட்டது. அந்தப் பரம்பரையையே திரும்பவும் உரிமையுடைய அரசராக்க வேண்டுமென்று விரும்பிய கட்சியினர் டோரி கட்சியெனவும், அதற்கெதிரானவர்கள் உவிக் எனவும் பெயர் பெற்றனர். இவ்விரு பகுதியான அரசியற் கட்சிகளுமே பாராளுமன்றத்தில் முதன்முதல் ஏற்பட்ட கட்சிகளாகும். இக் கட்சிகளின் பலமும் அரசர்களின் தயவிலேயே தங்கியிருந்தமையால் ஆரம்பத்தில் உவிக்கட்சியே அதிகாரமுடையதாயிருந்தது. இந்த நிலைமையில் நாம் பொதுசனங்கள் தான் அரசியலில் அதிகாரமுடையராயிருந்தனர் என எண்ணுவது தவறு. எந்தக் கட்சி பலம்பெற்றபோதினும் அதிகாரம் ஒரு சில ஆளும் குடும்பத்தினர் கையிலேயே இருந்தது. ஹனேவேரிய அரச பரம்பரை ஆரம்பமானதும் முதன் மந்திரியிடம் அதிகாரம் சென்றுவிட்டது. அவ்வரசர்கள் ஆங்கிலம் தெரியாதவர்களாகையால், மந்திரி சபைக்குத் தலைமை வகிக்கும் பொறுப்பையும் முதன்மந்திரியிடமே ஒப்படைத்து விட்டனர். 'வேஸ்போல்' என்பவரே அவ்விதம் முதன்மந்திரியென வழங்கப்பட்டார். பின்பு அம் முதன்மந்திரி, இயல்பாகத் தனக்குக் கிடைத்த அதிகாரத்தின்படி, ஏனைய மந்திரிகளையும் தன் கட்சியிலிருந்தே தேர்ந்தெடுத்தார். இதிலிருந்தே ஒரு கட்சி அரசியலை நடத்தும் காலம் ஆரம்பமாயது. அரசனுடைய அதிகாரமெல்லாம் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டன. அரசனும் அதிகாரமற்றவனுப் பிரதம மந்திரியின் திட்டங்களை ஏற்றுக்கொள்ளும் ஒரு பொம்மையானன். ஆனாலும் பொதுசனங்கள், பிரபுக்களாலேயே ஆளப்பட்டுவந்தனர். அப்பிரபுக்களே பாராளுமன்றத்தின் அதிகாரத்தை வைத்திருந்தனர்.

(தொடரும்)

## ருஷியாவின் தலைவர் ஸ்டாலின் ஜாதகம்

(சோதிடர் கே. எஸ் இராஜலிங்கம்)

| | | | |
|---|---|---|---|
| சந் சனி | செ | ல | 2 |
| வி ரா | ரேவதி | | 3 |
| 9 | | | கே |
| சூ | புத | 6 | சு |

கும்பராசியிலமைந்த ருஷியாவுக்கு இடபராசியிலுதித்த யோசெவ் ஸ்டாலின் சர்வாதிகாரியானமை இடபத்துக்கு கும்பம் கன்ம ஸ்தானம் என்றூற்போலும். ஸ்டாலினுக்கு 21-12-48 உடன் 70-ம் ஆண்டு தொடங்கும். அன்றுதானே ராகுதிசை குரு புத்தியும் தொடங்கி 2 வருடம் 4 மாசம் 24 நாட்களுக்கு நீடிக்கும்.

கும்பத்தின் பொறுத்த அடையாளம் குடம் கொண்டு நீரை வார்ப்பது. ஆகவே கும்பராசியுளமைந்த இத்தேசம் மேலைத்தேசத்தில் உன்னத நிலையையடையும். மக்களில் கும்பலக்கின ராசிகளில் வந்தவர்களும் உலகில் புதுக் காரியாதிகளை உண்டாக்கியே மறைவர். தொழில் மந்திரி ரீ. பி ஜயா அவர்களும்கும்பலக்கினத்தில் வந்தவர்.

நிற்க ஸ்டாலின் ஜாதகத்தைச் சற்று நோக்குமிடத்து இவர் வருங்காலம் அதி உன்னதமானது. பயங்காட்டி பூச்சாண்டி விடுதல் இவரிடம் பலியாது. அடக்குமுறைத்தாண்டவமும்இவரைக்கண்டால் மண்டியிடும். சனி புத்தி இவருக்கு ஆகாது. இருதய வியாதியோ அவமிருத்துவோ இவரைத் தாக்கும் என்று கோள்கள் கூசாது கூறுகின்றன.


விலை அறிவிப்பு

# வூட்வார்ட்ஸ் 'கிறைப் வாட்டர்'

வூட்வார்ட்ஸ் கிறைப் வாட்டரின் உண்மையான சில்லறை விற்பனவு விலை

**ரூபா 2 ஒரு போத்தல்**

[எங்கு உள்ளூர் வரி செல்லுபடியோ அது உட்பட]

**கூடுதலாகக் கொடுக்கவேண்டாம்**

வூட்வார்ட்ஸ் கிறைப் வாட்டரை நீர் வாங்கும்போது



ஒவ்வொருபோத்தலிலும் இவ்வடையாளத்தைப் பார்த்து வாங்கவும்

போலிகளில் எச்சரிக்கையாயிருங்கள்!

WW-111 W. WOODWARD LTD., LONDON, ENGLAND


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜதந்திர நிபுணர்கள்

அத்தியாயம் 17

ஸ்ரீலங்காவிற் பழைய காலத்தில் நிலவிய நீதிமன்றங்களில், எங்கள் மன்னர்களின் புகழ் ஓங்கிநின்றது. மதுவிலக்குச் சங்கங்களின் போஷகர்களாக விளங்கியபடியால் அவர்கள் மூக்கு நிரம்பக் குடிக்கவில்லை. அக்காலத்தில் வாழ்க்கையானது கஷ்டம் நிறைந்ததாகவும் இருக்கவில்லை.

இப்போது எங்கள் மந்திரிமாரும் ஏகாதிபதிகளும் அங்கும் இங்கும் சதா அலைந்து திரிவதால் அவர்களின் தலைகளே சுழன்றுவிடுகின்றன.

பழையகாலத்து ஸ்ரீலங்காவில் மன்னன் அரியணையில இருந்துகொள்ளுவார். இதுவே அவர் விரும்பும கோலமாகும். இராஜ கம்பீரத்துக்கு இது பெரிதும் பொருத்தமாக இருந்தது.

## நிலத்திலே தவழ்தல்

மந்திரிமார்கள் எழுந்து நின்றனர். அதிகநேரம் கால் கடுக்க இவர்கள் நின்றுவிடுவதால் முதுகிற் கூனல்விழுந்துவிடுகின்றது. பிரதம மந்திரி பிலமத்தலாவைக்கு இது காரணமாகவே முதுகு கூனியதெனத்தெரிகின்றது. ஆகவே, பிற்காலத்தில் இருப்பதற்கும் நிற்பதற்கும் அவர் ப்ரம சங்கடப்பட்டார். அவர் மன்னன் மீது வஞ்சம் தீர்த்ததற்கு இதுவுமோர் காரணமாக இருக்கலாம். தேர்தலிலே தோல்வியுறும் அபேட்சகர் வெற்றி பெறுபவர் மீது வழக்குத் தொடர்ந்து அவரைப் பதவியினின்றும் இக்காலத்தில் நீக்கிவிடுவதுபோல அக்காலத்திற் பிலமத்தலாவை ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனை அரசபதவியினின்றும் அகற்றினர்.

இனி, இராஜாவின் தாழ்மை மிகுந்த பிரஜைகள் நிலத்திலே தவழ்ந்தனர். மன்னன் வீற்றிருக்கும் இடத்தை அணுகுவதற்கு இதுவே கணிசமான முறையெனக் கணிக்கப்பட்டது. ஆகவே, மாளிகையிற் சதா வேலை செய்தவர்கள் தங்கள் வயிற்றை நினைத்தவாறெல்லாம் சுருக்கிக்கொள்ளும் சக்தி படைத்தவர்களாகஇருந்தனர். அவர்களுடைய வயிறு பஞ்சு மெத்தைமாதிரிச்சொகுசாக இருந்தபடியால் அவர்களின் உடம்பு அதிலே சௌகரியமாகச் சாய்ந்து கொள்வது சாத்தியமாயிற்று. இதுவிஷயத்திற் சிறிதளவு வில்லங்கமும் உண்டாயிற்று. இவர்கள் மெல்ல மெல்லப் பெரிய மனிதராகி வருவதையும், அவர்கள் எறிந்து நடப்பதையும் அரசன் கவனித்துவிட்டால், அவர்களின் வயிற்றுக்கு ஆபத்து உண்டாகிவிடுவதில்லை; அவர்களின் தலைகளையே கொய்துவிடுகின்றான்.

## குகைச் சித்திரம்

சிகிரியாக் குகைக் கோயிலுக்குள் அழகான மங்கையர் கைகளில் மலர் ஏந்திநிற்பதைக் காண்கின்றோம். வாதாம் பருப்புப்போன்ற அவர்களின் விழிகளே ஒரு தனி எழில் வீசுகின்றன. இதிலிருந்து இவர்களும் கால்கடுக்க நின்றிருக்கின்றனர் என்றே கருதவேண்டியிருக்கின்றது. இவர்களுக்கு உஷ்ணம் அதிகமாகவிருந்தபடியால் இவர்களும் நிலத்தை நோக்கி வளைந்த வண்ணமாகவே நின்றனர். கொடிபோன்ற அவர்களின் உடம்பு துவண்டதற்கு இதுவே முக்கிய காரணமாகும். இவர்களின் இதழ்களைப் பார்த்த பின்னரே பிரான்ஸ்காரர் இதழ்களுக்கு வர்ணம் தீட்டும் முறையைப் பின்பற்றக் கண்டு பிடித்தனர் போலும்!

சிகிரியாக்குகைச் சிகரத்தில் சுவாத்திய நிலைமை மாறும் வேளைகளில் காசியப்ப மன்னனின் பெண்மணிகளுக்கு ஜலதோஷம் உண்டாகிக் கொள்வது வழக்கம். காத்திராப்பிரகாரமாக இவர்களிற் சிலர் சுவாதத்துக்கு இரையாகிவிட்டால், அவர்களிலும்பார்க்க எத்தனையோ மடங்கு அதிகமானோர் இறந்தவர்களின் இடங்களை நிரப்பினர். அவசரகால தேவைகளைச் சமாளித்துக் கொள்வதற்காக, அவ்வரசன் தொகைக் கணக்கில் இராணிமாரை வைத்திருந்தான். போதாக்குறைக்கு வைப்பாட்டிமாரையும் ஆதரித்து வந்தான். எனவே அந்தக்காலத்திற் பெண்கள் சக்திக்கு எவ்வித குறைபாடும் இருந்ததேயில்லை.

## ககனமார்க்கம்

சரித்திர காலத்துக்கு அப்பாற்பட்ட ஸ்ரீ லங்காவில் விமானப் போக்கு வரத்து சர்வ சாதாரணமாக இருந்தது. அப்படியிருந்தபோதிலும் யானைமீது ஏறிச் செல்வது அநேகருக்கு மிகப்பிரீதியைக்கொடுத்தது. மன்னர்கள் யானைமீது பவனி செல்வதையே விரும்பினர். ஏனெனில் அவர்களின் ஈரல் குலுங்குவதற்கு அது போதிய சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. இல்லாதுவிடின் அவர்களுக்குச் சோம்பல் அதிகரித்துக் கொள்ளும். மந்திரிமார் இத்திமைக்குள்ளாகவில்லை. ஏனெனில் அவர்கள் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமும் குனிந்து நிமிர்ந்தனர். மாளிகையிலுள்ள மகளிரின் துடியிடைக்கும் இதுவே காரணமாகும்.

தற்கால ஜனநாயக ஆட்சியானது இடியப்பம்போலச் சிக்கல் நிறைந்தீதொன்று. அந்தக்காலத்தில் மந்திரிமாரின் வேலைகள் பாலப்பம்போல மிகச் சுலபமாக விருந்தன. வாய் புதைத்து மண்டியிடுவதுடன், "ஏய்" என்று அதிகார தோரணையுடன் பேசுவதற்கும் பழகிக்கொண்டால் அவன் மகா மேதையாகி விடுகிறான். தலைகுனியும்போதும் அதற்குக் குறித்தவோர் இடைவெளியிருக்கவேண்டும். இல்லாதுபோனால் ஆபத்துத்தான். மிருக பரிபாலனம் மன்னர்களின் நிர்வாகத்தில் அமைந்திருந்தபடியால் அக்காலத்து இராஜாங்கக் கொலைஞர் மிருக பரிபாலன அதிகாரிகளுடன் தலைகளைக் கொய்துகொள்ளும் விஷயத்திற் போட்டியிட்டனர்.

## யானை ஏற்றம்!

இவ்விபரங்களிலிருந்து அக்காலத்து மன்னர் மாளிகையின் நிர்வாக நிலைமை ஒருவாறு புலனாகின்றது. அந்தக் காலத்தில் வேலைகள் [illegible]ளவு கடுமையாக இருந்த[illegible]. ஆனால் இன்று விஷயங்கள்

> அரசியற் புலிகளுக்கு அறிவு குறைவாக இருந்தாலும், பாருங்கள் சிரித்துச் சமாளிக்கப் பழகிக் கொள்ளவேண்டும்! இந்தப் பண்புகள் எங்கள் இராஜதந்திரிகளிடம் அபரிமிதமாக இருக்கின்றனவென்பது ஜாக்கஸ் கண்ட முடிபு. இது டைம்ஸ்ஒவ் சிலோன் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளியாகியுள்ளது. ப-ர்.

நேர்மாறாக இருக்கின்றன. இக்கால மந்திரிமாருக்கு வாழ்க்கையானது மாயமல்ல, மந்திர தந்திரமல்ல; வாழ்க்கையானது அவர்களுக்கு உண்மையான விருப்பத்துடன் இரம்மியமாகவு மிருக்கின்றது. பல்லக்கில் அமர்ந்து படுத்துறங்குவதிலும், யானைமீது இவர்ந்து பவனிசெல்வதிலும் எங்கள் மந்திரிமாருக்கு உற்சாகமில்லை. எனவே அவர்கள் வானவெளியில் நீலக் கடல்களையெல்லாம் கணப்பொழுதிலே தாண்டிவிடுகின்றனர். இவ்வளவும்தான் அவர்கள் கண்ட துக்கமென்றாற் பரவாயில்லை. ஆனால் இதுவே அவர்களின் துயரங்களின் வித்தாகிக் கொள்ளுகின்றது.

சமீபத்திற் சீமையிலே சாம்ராச்சிய மந்திரிமாரின் மகாநாட்டு நடவடிக்கைகளைப் பத்திரிகைகளிற் படித்தோமல்லவா? இவற்றிலிருந்து இராஜதந்திர நிபுணனாகிக் கொள்வதற்கான இலட்சணங்கள் எவை என்பது மக்களுக்கு நன்கு விளங்குகின்றது.

## உடலுறுதி

இலங்கைத் தீவளவு விஸ்தீரணமுள்ள ஒரு நாட்டின் பிரதம மந்திரி, உயரத்திலும் பருமனிலும் சாதாரண மக்களிலும்பார்க்க உயர்ந்தவராக இருக்கவேண்டுமென்பது ஒரு நியதியாகி விடுகின்றது. இந்தியா, பாகிஸ்தான்போன்ற பெரிய நாடுகளுக்கு இந்த வரையறை அவசியமற்றது. நடுத்தரமான உயரம் பருமனுள்ளவர்கள் இந் நாடுகளின் பிரதிநிதிகளாகப் பதவிவகித்துக்கொள்வதில் ஒரு பிசகுமில்லை. ஏனைய நாடுகளைப் பொறுத்தமட்டில் அவை எவ்வளவு சிறிய நாடுகளாக இருக்கின்றனவோ அவற்றினும் பன்மடங்கு பருமனானவர்களே பிரதிநிதிகளாகிக் கொள்ள வேண்டும். அப்படியானாற்றான் அவர்கள் அகில உலகத்தின் கவனத்தையும் கவர்ந்து கொள்ளமுடியும். சுருங்கக் கூறின் 'உள்ளத்துறுதி உடலுறுதிக்கண்ணது' என்ற அருஞ் சொற்றொடருக்கேற்ப எங்கள் பிரதிநிதிகளும் முரட்டுப் பேர்வழிகளாக இருத்தல் அவசியம்.

முதலாவதாக அவர்கள் நிமிர்ந்துநிற்கப் பயின்றுகொள்வதுடன் பத்திரிகைக்கெனப் புகைப்படங்கள் பிடிக்கும்போது புன்முறுவல் செய்யவும் பழகிக்கொள்ள வேண்டும். ஜனநெருக்கடிக் கிடையிலும், நிலத்தில் வீழ்ந்துபோகாதவண்ணம் அவர்கள்மீது சாய்ந்துநிற்பதற்குஉள்ளத் திண்மை அத்தியாவசியமாகும். அப்பியாசமே கூசாவித்தை [illegible] வேண்டற்பாலது.

அத்துடன் எந்தநேரமும் சிரித்தபடியே காட்சியளிக்க வேண்டும். அரசியல் வாதிகள் சிரித்துக்கொள்ளத் தயங்குவதில்லை. இது சில சமயங்களில் 32 பற்களையுங்காட்டி இளிக்கும் கலையாகியும் விடுகின்றது. இது சிறு புள்ளிகளைப்போன்ற உதவி மந்திரிமாருக்கு ஏற்றதாகவிருக்கலாம். ஆனால் உலகப் பிரமுகர்கள் இளிச்ச வாயுடன் காணப்படுவார்களாகிற் பார்ப்பவர்களுக்கு நடுக்கம் உண்டாகிக் கொள்ளும். ஆகவே, பிரதமரின் சிரிப்பானது ரோசா மலர் இதழ்களை மெதுவாக நீக்குவதுபோன்று மலர்ச்சி பெறவேண்டும். வேண்டுமாயின் இடையிடையே இடிஇடி எனச் சிரித்து முகவாதையைக் குறைத்துக்கொள்ளலாம்.

இத்துறையில் இறங்கும் புதிய பேர்வழிக்கு இது என்னவோ சுலபமான [illegible] போலத் தோன்றும். ஆனால், சிரிப்புடன் கூடவே கைகுலுக்கும் சம்பிரதாயமுமிருப்பதால் இது அப்படி இலேசான காரியமல்லவென்பதை அவர்கள் உணர்வார்கள். மணம்புரிந்து கொள்வதற்கும், சண்டைபிடிப்பதற்கும் இருவர் சேர்ந்துகொள்வதுபோலக் கைகுலுக்குவதற்கும் இரு பேர்வழிகள் வேண்டப்படுகின்றனர். பல நுணுக்கங்கள் உள. வாட்டசாட்டமான ஒருவர் கைகுலுக்கும்போது தமது உள்ள நெகிழ்ச்சியைக் காட்டுவதற்காகக் கைவிரல்களைக் கசக்கிப் பிழியக்கூடும். உடனே இப் பிடிச்சிராவியில் அகப்பட்டுக் கொண்டவர்கள் காற்பெருவிரல்களில் எழுந்து விழிகள் பிதுங்கக் கீச்சிடுவாரானால் அது பிழையான காரியமாகும். ஆகவே, ஒருவர் கையைப் பிடித்து எப்படிக் குலுக்குகின்றாரோ அப்படியே மற்றவரும் நடந்துகொள்ளவேண்டும்.

## கரடுமுரடு

ஓரே இடத்தில் மரம்போல் நிற்பதும், ஆயிரக்கணக்கான கைகளைப் பிடித்துக் குலுக்குவதும், பல்லாயிர்க்கணக்கான முகங்களை மணிக்கணக்கில் பார்ப்பதும் சாமானியமான விஷயமல்ல. இத்தனைக்கும் திண்மையான உடலும் ஒழுக்கமும் அவசியமாகின்றன. அரசியல் உலகிற் சஞ்சரிக்க விரும்புபவர்கள் இவற்றை நித்தமும் அப்பியாசம் செய்வதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் ஒன்றுமாத்திரம் இப்படிச் சுகமாகப் பெற்றுக்கொள்ள முடியாது. அதுதான் சாப்பாடு பூரணமாய்ச் சீரணமாகும் விஷயம்.

**நவீன ஆராய்ச்சி**

பால்மணம் மாறாத அரசியற் குழந்தைகள் இக்கூற்றைக்கேட்டுப் பரிகாசம் செய்வார்களாயின் அது நூதனமல்ல. அரசியல் வாதிகளின் விருந்து வைபவங்களில் இக்குழந்தைகள் பங்குபற்றுவார்களாகில் தங்கள் பிழையை உடனே உணர்வார்கள். புகழ்பெற்ற சில அதிதிகள் சுள்ளிபோலத்தோன்றினும் சத்து நிறைந்த சாப்பாட்டை உட்கொள்வார்கள். இதை எரிப்பதற்காக நன்றாகத் தண்ணீர் போடுவார்கள். ஆனால் ஈவலங்காவின் இராஜதந்திர நிபுணர்கள் 'ஐஸ்கிறீம' போன்ற குளிர்ந்த பானங்களை அருந்திக் குஷியாகத் திரிகின்றனர். இந்த விஷயத்தில் இவர்களுக்கும் பழையகால அரசர்களுக்கும் ஒற்றுமை யிருக்கின்றது. எவ்வாறெனில் இவர்களும், அவர்களைப்போலவே மதுநீக்கம்போன்ற சங்கங்களின் போஷகர்களாக விருக்கின்றனர் என்பதே.

ஆகவேதான் பழையகால இராஜதந்திரிகள் எவ்வளவுக்கு எவ்வளவு பிரபல முள்ளவர்களாக விளங்கியபோதிலும், இன்று இலங்கையின் சார்பாக உலக மகாநாடுகளிலும் சங்கங்களிலும் பங்கு பற்றிக்கொள்பவர்கள் மிக உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது அசைக்கமுடியாத முடிபாகும்.

ஆம், அவர்கள் கரடுமுரடான பேர்வழிகள்.


தொடர்பான

**சரித்திர பாடப் புத்தகங்கள்**

**2-ம், 3-ம், 4-ம், 5-ம் வகுப்புக்குரியன**

ஆக்கியோன் :

**ச. ஜெயவீரசிங்கம் B. A. (Hons.)**

சரித்திர ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

இப்புத்தகங்களை நீங்கள் ஆதரிக்க வேண்டியதற்கு நியாயங்களாவன :

1. வித்தியாபகுதியாரின் பாடத்திட்டத்துக் கமையும் படி இப்புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன.
2. இப்புத்தகங்களில் உபயோகமுள்ள பல சித்திரங்களும் வினாக்களும் இருக்கின்றன. ஒவ்வொரு பாடமும் வெகு சிரத்தையுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது.
3. உண்மையான சரித்திரமன்றிக் கட்டுக்கதைகள் நீக்கப்பட்டுள்ளன.
4. இப்புத்தகங்கள் இலகுவான நடையி லெழுதப்பட்டன.
5. இப்புத்தகங்களிற் காணப்படும் சில பாடங்கள் ஆரம்ப வகுப்புக்களுக்கென எழுதப்பட்ட வேறு புத்தகங்களில் இல்லை.
6. இப்புத்தகங்களின் விலை மிகவும் சகாயமானது.

ஆசிரியர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்கும் தாராளமான கழிவு கொடுக்கப்படும்.

பிரதிகள் பிரபல புத்தக வியாபாரிகளிடமேனும் நூலாசிரியரிடமேனும் பெறற்பாலன.

[ 3572- Viii]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னுகம், சர்வதாரி கார். ௨௦

— சாந்தி ஆண்டு 80 —

## இலங்கைவாழ் இந்தியர்

இலங்கையில் வாழும் இந்தியர்களுக்குச் சம உரிமைகள் அளிப்பதுபற்றி, இலங்கைப் பிரதமராகும் சேனநாயகாவுக்கும் இந்தியப் பிரதமராகும் பண்டித நேருவுக்கு மிடையிற் கடிதப் போக்குவரத்துகள் சில மாதங்களாக நடைபெற்றமை யாவரும் அறிந்த விஷயம். அக்கடிதங்கள் இப்போது வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்விஷயமாக இருபகுதியாரும் இணக்கமடையாது போனதும் யாவரும் அறிந்த தொன்று. இலங்கை யரசினர் அளவு கடந்த உரிமைகளைவிட்டுக் கொடுத்துளராகவும், அதனுல் இலங்கைமக்கட்குப் பாதகம் ஏற்படுமோவென்றும் சேனநாயக்கா கவலையடைகின்ருர். இதற்கு நேர்மாருகப் பண்டிதநேரு அவர்கள் இலங்கையில் நீண்டகாலமாக வாழ்ந்து இலங்கையில் செல்வவிருத்திக்கு உழைத்துவரும் இந்தியர்க்குச் சம உரிமை அளிக்கவில்லையே என்று கவலையடைகின்றனர். புதிதாக ஏற்படும் சட்டப்படி, இந்தியர் அடிமைகளாக இருந்து உழைப்பதேயன்றிப் பூரணமான சமவுரிமையைப் பெறவியலாதாகு மென்பது அவர் கருத்தாகும்.

இவ்விஷயமாக ஏற்பட்டுள்ள வாக்குவாதத்தை நீடித்து நடத்துவதை இந்தியப் பிரதமர் விரும்பவில்லை. இலங்கையரசினர் தமது கோரிக்கையை அங்கீகரிக்க மறுத்து விட்டமையால் தாம் இவ்விஷயமாக எதுவுங் கூற இடமில்லையென்று விவாதத்தை நிற்பாட்டி விட்டனர். புதிய சட்டப்படி தனவந்தராகும் இந்தியர் சிலர் மாத்திரம் இலங்கையிற் சம உரிமைகளைப்பெற்று வாழக்கூடும். ஆனுல், ஆயிரக்கணக்கான ஏழை இந்தியர்கள் என்றும் அன்னியராகவே இருக்கவேண்டியதாகின்றனர். இதுவரையில் அவர்கள் பெற்றுவந்த வாக்குரிமையையும் புதிய சட்டப்படி இழக்கவேண்டியதாகின்றனர். இலங்கை வாசிகள் என்ற நிலையை அடைந்துளராக இவ்விந்தியர்கள் பதியப்படமுன், எத்தனையோ நிபந்தனைகளைத் திருப்தி செய்யவேண்டியிருக்கின்றனர். போதிய கல்வியறிவில்லாத இவ்விந்தியர்கள் இவ்விஷயமாக வேண்டிய அத்தாட்சிகளுடன் அரசினரைத் திருப்தி செய்வதும் சாமானிய விஷயமல்ல. எனவே, இவர்கள் இலங்கை மக்களைப் போல் நிரந்தரமான உரிமைகளை எப்படிப் பெறுவர்?

இப்போது, இலங்கையரசினர் இவ்விஷயமாக இயற்றும் சட்டம் இந்தியர்க்குச் சமவுரிமை அளிக்கவன்று; அவர்களை எவ்விதத்திலும் நாடுகடத்த எழுந்த சட்டமாகுமென இந்தியப் பத்திரிகைகள் வாதிக்கின்றன. இலங்கை அரசினரின் எண்ணப்படி அடிமைகளாயிருக்க விரும்பும் இந்தியர்க்கன்றி மற்றைய இந்தியர்க்கு இலங்கையில் இடமில்லை என்பது வெளியாகின்றதாம். இப்புதிய சட்டத்தில் தமக்கு ஆட்சேபனையுள்ள பகுதிகளை இந்திய மக்கள் எடுத்துக்காட்டியும் அவைகளைத் திருத்த அல்லது மாற்ற இலங்கையரசினர் உடன்பட்டிலர். இவ்விஷயமாக இலங்கையரசினர் பிடிவாதமாகவே நிற்கின்றனர். இந்நிலை காலகதியில் தீமையாக முடியாதா என்று கேட்கின்ருேம். இந்தியர் கேட்கும் சாமானிய உரிமைகளைத்தானும் சேனநாயகா வழங்க ஒருப்படுகின்ருரில்லையென்று குறை கூறப்படுகின்றது. மேலும் புதிய சட்டப்படி இலங்கையில் உரிமைகளைப் பெற்று வாழ்வதற்கு உரியரென்று பதியப்படும் இந்தியர், நிலங்களை விலைக்குப் பெறவியலாது. நிரந்தர இலங்கை மக்களைப்போல் வேறும் அநேக வசதிகளையும் பெற்றுக்கொள்ள முடியாது. இந்நிலையில் இந்தியர் புதிய சட்டத்தை எதிர்த்து நிற்பது நூதனமன்று. ஆகவே, இலங்கை அரசினர் இயற்றும் புதிய சட்டம் எத்தனையோ புதிய சங்கடங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆரம்பத்திலிருந்து இந்தியர் விஷயமாக சேனநாயகா அவர்கள் பிடிவாதமாக ஒரே கொள்கை யுடையராகவே காணப்படுகின்றனர். இலங்கையைத் தமது சொந்த நாடாக்க விரும்பாத அன்னியர்கட்கு, இலங்கை மக்களுக்குப் போல், சம உரிமைகள் அளிக்க வேண்டுமென நாம் எடுத்துக் கூறவில்லை. ஆனுல் நிரந்தரமாக இலங்கையில் வாழ இணங்குவோர்க்கு அவ்வுரிமைகளை அளிக்கத் தயங்குவதுதான் எமக்கு விளங்கவில்லை. போதிய உரிமைகளை வழங்காவிடின், அவ்விந்தியர்கள் அடிமைகளாக வன்றி வேறெவ்விதம் இலங்கையில் வாழ்வது. மேலும் இலங்கைத்தேசம் பலவழியிலும் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு பூண்டுள்ளது. இருநாடுகளும் என்றும் நட்புப் பாராட்டி வாழவேண்டிய நிலையில் உள்ளன. விஷயமிவ்வாருக, அபிப்பிராய பேதங்களும் முரண்பாடுகளும் ஏற்படின் இருநாடுகட் கிடையிலும் தொல்லைகளே உண்டாகும். இவ்விஷயத்தை இணக்கமாக முடிவுசெய்ய இன்னும் இடமுண்டு. பிடிவாதமாக நில்லாது விட்டுக்கொடுப்பின், ஒருவிதமான சமரசத்தோடு கூடிய முடிவினை இருநாடுகளுஞ் சேர்ந்தாலோசித்துக் கொள்ளலாம். எனவே, இரு நாடுகளும் மேன்மேலும் சமரசமடைய முயலவேண்டுமென்பதே எமது கோரிக்கை. இப்போது முடிவு செய்யாவிடின், இதனுல் ஏற்படும் துவேஷம் நாளடைவில் வேரூன்றி நீடித்த சங்கடங்களை உண்டாக்கிவிடு மல்லவா?

## புதிய கல்விமுறை

இலவசக் கல்வித் திட்டமும் அதையொட்டித் தாய்ப்பாஷை மூலம் கல்வி கற்றுக்கொடுத்தலும் அனுசரணைக்கு வந்ததன் பேருக அநேக புதிய சங்கடங்கள் தோன்றியுள்ளன. புதிய மாற்றங்கள் ஏற்படும்போது இந்நிலை வந்தெய்துவது இயல்பு. அக்குறைகளை எப்படியாவது நிவிர்த்தி செய்ய வழிகாண வேண்டியதுதான். இக்குறைகட்காக பெருநன்மைகட்கு இலக்காகும் இம் முறைகளைக் கைவிடுவதெப்படி? மேலைத்தேச நாகரிகம் பாஷை என்பனவற்றில் மிகச்சென்று தாடனப்பட்ட சிலர், இலவசக்கல்வியை எதிர்ப்பதோடு ஆங்கிலக் கல்விக்கே மறுபடியும் பிரதம ஸ்தானம் கிடைக்கச் செய்ய முயலுகின்றனர். இவர்களின் அடிமை மனப்பான்மையை என்னென்று கூறுவது? நூற்றுண்டுகளாக அந்நியரின் ஆதிக்கத்தில் இருந்ததின் பேருக இவர்கள் மன நிலையும் அடிமைத் தன்மையை அடைந்துவிட்டது. கல்விமுறை தாய்ப் பாஷைக்கு மாறுங்கால் சில வருடங்கட்கு எத்தனையோ ஊழல்களைத் தோற்றச் செய்வது நிச்சயம். இதற்காக இன்னும் ஆங்கிலமாக இருக்கவேண்டு மென்பது ஒவ்வாத வாதம். எவ்வளவோ பிழைகள், சங்கடங்கள், தடக்குகள், தாமதங்கள் என்பன ஏற்படினும் இடமாகநின்று தாய்ப் பாஷைமூலம் கல்வி கற்றுக் கொடுப்பதில் அரசினர் உறுதியாக நிற்கவேண்டும். சில வருடங்கட்கு சில பல தடைகள் ஏற்படினும் காலவடைவில் இதனுல் எய்தவிருக்கும் பெருநன்மைக்கு எல்லை யுண்டா? இப்புதிய கல்விமுறையால் மாணவரின் கல்வித்தரம் பன்மடங்கு குறைந்துவிட்டது என்ற குறையும் கூறப்படுகின்றது. இக்குறையும் நிலையாக நிற்பதன்று. தேச பாஷைக் கல்வி உன்னத நிலையை அடைய இக் குறைகள் யாவும் நீங்கிவிடும் என்பது நம்பிக்கை. எனவே அரசினர் இலக்கினைத் தவறவிடாது காலத்துக்குக்காலம்பெறும் அனுபவத்தைக் கொண்டு திருத்தங்களைக் கைக்கொள்வாராக. தாய்ப் பாஷைக் கல்விக்கும், இலவசக் கல்விக்கும் ஊறு வாராதிருக்க வேண்டியதுதான், சுயநலத்துக்காகப் பிழையான நோக்கமுடன் கூக்குரல் செய்பவர்களை அரசினர் புறத்தே விடுவது மிக நல்லது.

## இது நியாயமாகுமா?


இந்தியா கூறுபோடப்பட வேண்டுமென்று பிடிவாதமாக நின்று வாதித்த பாகிஸ்தான் அரசினர் இப்போது பாலஸ்தீனம் பிரிக்கக்கூடாது என்றும் வாதிக்கின்றனர். பாலஸ்தீனத்தில் வசிப்போர் யூதரும் அராபியருமே. அராபியரோ சனத்தொகையிற் கூடியவர். அந்நாட்டினை இப்போது கூறுசெய்து யூதருக்கு ஒரு பாகத்தைக் கொடுக்க ஐக்கியதேசங்களின் சங்கம் முடிவு செய்தளது. அதனை விடாப்பிடியாக நின்று அராபியர் எதிர்க்கின்றனர். இதற்கு மிக ஆதரவளிப்பவர் பாகிஸ்தானின் அந்நியநாட்டு மந்திரியாகும் சேர் ஜபருல்லாகான். சனநாயக முறைப் பிரகாரம் பெரும்பான்மையோரின் அபிப்பிராயப்படியே செய்வது முறை என்கின்ருர். பாலஸ்தீனத்தில் அராபியர் தொகையிற் கூடினவராகையால் அவர் சொற்படி செய்யவேண்டுமாம். அப்படியாயின் இந்தியாவிற் பெரும்பான்மையோர் இந்துக்கள். அவர்கள் எண்ணப்படி இந்தியா கூறுசெய்யப்படாதிருக்க வேண்டாமா? பாகிஸ்தான் வாதிகள் தமக்கொரு நியாயமும் பிறர்க்கொரு நியாயமும் பேசுவது எப்படிப் பொருந்தும்? வசிக்கச் சொந்த நாடில்லாது பெருங் கஷ்டமடையும் யூதர்கள் தமது ஆதி நாடாகும் பாலஸ்தீனத்தில் வசிக்க இடங் கொடுக்கப்படாது அலைந்து திரிவ்தா? ஐக்கியநாடுகள் சங்கத்தினர் இவ்விஷயத்தில் செய்த தீர்ப்பு நியாயமானதென்றே கூறவேண்டும். யூதர்கள் தங்கள் நாட்டில் தமது அரசாங்கத்தின்கீழ் வாழும் நாளை எதிர்பார்க்கின்றனர். இந்த நிலையை விரைவில் அவர்கள் அடைவாரென்பதில் ஐயமில்லை. எவ்வித எதிர்ப்புகளையும் தடைகளையும் உண்டுபண்ணினுலும் அராபியர் எண்ணம் சித்தியடையப்போவதில்லை. ஐக்கியநாடுகள் சங்கம் யூதர்க்கு ஓர் சொந்த இல்லம் அளிப்பதில் தளம்ப மாட்டாது.

### தூக்கிலிடப்படலாம்

யுத்தகாலத்தில் யப்பானியப் பிரதமராகவும், யுத்தக் குற்றவாளியெனச் சர்வதேச இராணுவ நீதி மன்றத்தினுல் மரண தண்டனை விதிக்கப்பட்டவருமான டோஜோ டிசம்பர் 8-ந் தேதியன்று தூக்கிலிடப்படலாம் என்று கருதப்படுகிறது. பேர்ள் துறைமுகத்தை ஜப்பானியர் தாக்கியதின் 7-வது வருடாந்திர நாள் வருகிற டிசம்பர் 8-ந்தேதியாகும்.

மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள் சார்பில் அமெரிக்க உயர் [illegible] றம் டிஸம்பர் 6-ந் தேதி கூடுகிறது.

## பாதை ஓரத்தில்




### வேலையற்ருேர்களுக்கு

வேலை தேடிக் கொடுக்கும் காரியங்களைச் செய்வதற்கான ஓர் ஆலோசனைச் சபை சிறிது காலமாகக் கூடிக் கலைந்துவந்தது. பிரதிநிதிகள் நீண்டகால ஓய்வு எடுத்த இடைக்காலத்தில் இந்த வேலையற்ருேர் நிவாரண சபையுங் கனவாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டது.

இந்தப் பிரச்சினையை இனி, தொழில் சமூகசேவைப் பகுதியினரே கவனித்துக்கொள்ள வேண்டுமாம். இவர்களால் இது இயலாத காரியமெனக் கண்ட பின்னரே ஆலோசனைச் சபை ஒன்று நியமிக்கப்பட்டது, இப்போது என்னவென்ருல், பழையபடி வேதாளம் முருக்கமரத்தில் ஏறிய கதையாகி விட்டதே!

### மதுவின் மான்மியம்

மதுவிலக்குச் சங்கமொன்றிற் சமீபத்திலே உத்தியோகப் பொறுப்பற்ற மந்திரி குணசிங்கா அவர்கள் பேசும்போது குடிவகையின் பெருமையைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கின்ருர். பூரண மதுவிலக்குச் சங்கத்தில் மந்திரி பேசியபடியால் அவர் மயக்கமின்றிச் சுய அறிவுடன்தான் பேசியிருப்பார். சொல் விளம்பியின் பெருமையைப்பற்றி மந்திரிமார்கள் அறியமாட்டார்கள். ஏனெனில் அது சாதாரண மக்கள் குடித்து வெறிக்கும் குளிர்ந்த பானமாகும்.

மதுவுக்குச் சமூகத்திலுள்ள மதிப்பைப் பற்றியே மந்திரி குணசிங்கா நித்திப்பாகப் பேசினுர். பெரிய கூட்டங்களிலும், பிரமுகர்களின் வட்டாரங்களிலும் இடம் பெறுவதற்காகவே சிலர் குடிக்கின்றனர் என்பது மந்திரியின் கருத்து. சிலர் துக்கத்தைப் போக்குவதற்காக மதுவருந்துகின்றனர். வேறு சிலர் 'உஷார்' பெறுவதற்காகப் புட்டியைத் தட்டிவிட்டு உட்கொள்ளுகின்றனர். யார் எதைச் சொன்னுலும், மது அரக்கனுக்குச் சமூகத்தில் நல்ல மதிப்பு இருந்துவருகின்றதென்பது அசைக்க முடியாத உண்மையாகும்.

### கங்காணி ஆட்சி?

இலங்கையிலுள்ள இந்தியர்களுக்கு இலங்கை அரசாங்கம் உதவுவதற்குத் திட்டமிட்டுள்ள விபரங்களைப் பார்த்துவிட்டுக் கண்டியிலுள்ள சிங்களர் பிரலாபிக்கின்றனர். 'கண்டியில் இனி கங்காணி இராச்சியமா?' என்று அவர்கள் பீடுங்கி அடுக்குகின்றனர். இதற்காகக் கண்டிப் பகுதி பிரதிநிதிகள் இம் மசோதாவைச் சபையில் எதிர்க்கப் போகின்றனராம். எதிர்க் கட்சியினர் மசோதாவை எதிர்ப்பதற்கு வேறு காரணங்கள் உள. இவர்களுடன் ஒரு சில சிங்களரும் சேர்ந்தால் வாக்குகள் அதிகரிக்கலாம். ஆனுல் நோக்கம் புனிதமானதா?

### இலக்கிய இன்பம்

வீடுபேற்றுக்கு வழிகாட்டுவனவே இலக்கியம் என்பர் பெரியோர். அது இப்போது வேண்டியதில்லையெனக் கூறி வாசகர் ஒருவர் வேருேர் தமிழ்ப்பெரியார் தெரிவிக்குங் கருத்தை எமக்கு அனுப்பியிருக்கின்ருர். அது வருமாறு: "நமது இலக்கியங்களை சுதந்திரப் போராட்டத்திற்குப் பயன்படுமாறு செய்ய வேண்டியது நம் கடமை, அந்த உரிமை நமக்கு உண்டு. இதைத் தவிரப் பேரின்பவீட்டிற்கு வழிகாட்டும் எந்தப் பேரிலக்கியமும் இப்போது நமக்குத் தேவையில்லை. நம்மவர் நாடு நலியும் காலை 'வானவர் நாடு' வலியவரினும் அதை நான் வேண்டேன். கடவுளே என் கண்ணெதிரில் நின்று கைகாட்டி அழைப்பினும், "நான் பிறந்த நாட்டிலே, கஞ்சிக்குக் கதியற்று, கண்ணீருங் கம்பலையுமாகக் கலங்கியழும் ஏழை மக்களின் கவலையைப் போக்குவதே எனக்கு இன்பம், அதைவிடப் பேரின்ப வீடும் எனக்குப் பெரிதல்ல".

இதில் எவ்வளவோ உண்மை இருக்கின்றது. அத்துடன் இது தமிழ்ப் பேரறிஞர்களின் மூளைகளுக்கும் நல்ல வேலை கொடுக்கும் பெற்றி வாய்ந்தது.

### சீனம்! சீனம்!

சீனத்தின் நிலைமை படுமோசமாகிக் கொண்டு வருகின்றது. அமெரிக்காவின் உதவியை நாடி ஸ்ரீமதி சியாங். கே. ஷேக் அங்கு சென்ருர். அவருக்கு அமைதியானவரவேற்பு நடைபெற்றதாம். போயும் போயும் சீனம் அமெரிக்காவின் வலையிலேதான் சிக்கிக் கொள்ளுகின்றது. ஆகவே, நிலைமை சீரடைவதற்கு வழியே இல்லை?

### யப்பான்! யப்பான்!

நியூஸிலந்துப் பிரதமர் சமீபத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சங்கத்திற் பேசும்போது யப்பானைச் சங்கத்திற் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனக் கரடியாய்க் கத்தினுராம். இதைக்கேட்டு எல்லாரும் திகைத்துப்போனுர்கள். பின்னர் ஆராய்ந்தபோது, இலங்கையை நினைத்துக்கொண்டு 'யப்பான் யப்பான்' என்று கத்தினுர் என்பது தெளிவாயிற்று!

### கண்டி தேர்தல் வழக்கு

பிரதிநிதிகள் சபைக்குக் கண்டிப்பகுதிப் பிரதிநிதியாகிய ஸ்ரீ. டி. பி. இலங்காரத்னவின் தேர்தலை ஆட்சேபித்துக் கண்டியைச் சேர்ந்த எச். டி. பி. செனவிரத்னவும், ஜி. எல். சைமன் சில்வாவும் தொடர்ந்துள்ள வழக்கு விசாரணை நீதிபதி ஸ்ரீ நாகலிங்கம் முன்னிலையிலே தொடர்ந்து நடைபெற்றது.

### சீனத்தின் நிலை

"சீனத்திற்பொதுவுடமைக்காரர்களை எதிர்த்துச் சீன அரசாங்கத்துக்கு அமெரிக்கா உறுதியான உதவி செய்யாததற்குக் காரணம் அநேக சீனத்தலைவர்களிடம் காணப்படும் ஊழல்களே என்று சொல்லப்படுகிறது. ஊழல்கள் சீனர்கள் பரம்பரையான வழக்கமல்ல. அல்லது சீனர்களின் துர் அதிர்ஷ்டமுமல்ல' என்று "டைம்" என்ற வாரச் சஞ்சிகை எழுதியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் போக்கு

## பயமுறுத்தும் வேடிக்கை

காஷ்மீர் விஷயமாகப் பேசும்போது பாகிஸ்தான் அந்நியநாட்டு மந்திரியாராகும் சேர் ஜபருல்லாகான் இந்தியாவைப் பயமுறுத்தினர். இப்போது அளவுகடந்து படைகளை இந்திய அரசினர் காஷ்மீருக்கு அனுப்புவதால் தாமும் அப்படிச் செய்ய வேண்டியதாகுமென்றும், அப்படியாயின் இரு அரசாங்கத்துக்குமிடையில் பயங்கரமான யுத்தம ஏற்படும என்றனர். இவ்வாறு கூறிவிடின் இந்திய அரசினர் அஞ்சுவர் என்று இவர் எண்ணினர்போலும். "நமது நாட்டினை அதாவது காஷ்மீர் சமஸ்தானத்தை நாம் பாதுகாப்பதற்குச் சேனைகளை அனுப்புவது எப்படிப் பிழையாகும்" என்றார் சர்தார் படேல். கொள்ளையடிக்கும் பட்டாணிகளைத் துரத்தும் வரையும் இந்திய படைகள் காஷ்மீரைவிட்டு வெளிவரமாட்டா?

### மீண்டும் ஹைதராபாத்

ஹைதராபாத் விஷயம் மறுபடியும் விவாதிக்கப்படவேண்டுமென்று பாகிஸ்தான் பிரதிநிதி சர்வதேசநாடுகளின் சங்கத்தில் பிரஸ்தாபித்தார். ஆனால் இந்திய அரசினரின் பிரதிநிதி தகுந்த பதில் அளித்தனர். நிஸாம் மன்னர் தமது பிரதிநிதியைத் திருப்பிக் கூப்பிட்டு விட்டனர். தமது முறைப்பாட்டினையும் திருப்பி யெடுத்துவிட்டனர். ஆனால் பாகிஸ்தான் பிரதிநிதி காஷ்மீர், ஹைதராபாத் விஷயங்களைக் கைவிட எப்படி விரும்புவர்? சர்வதேச நாடுகளின் சங்கத்தினர்தாமும் உண்மையை அறிந்தபின்னரும் வீண் பேச்சுகட்கு இடங்கொடுப்பது நகைப்புக்கிடமாகின்றது. ஹைதராபாத்தில் அமைதி ஏற்பட்டுவிட்டது. சமஸ்தான மன்னரும் இந்தியாவுடன் சேர உடன்பட்டு விட்டனர். சனநாயக அரசியல் இங்கு ஏற்படுத்த முயற்சிகளும் நடக்கின்றன அதன் பின் வீண் புகார்களை என் கிழப்ப வேண்டும்.

### ஜெயப்பூர் காங்கிரஸ்

ஐம்பத்தைந்தாவது காங்கிரஸ் இவ்வருடம் டிஸம்பர் 16, 17, 18, 19-ம் திகதிகளில் ஜெயப்பூர் நகரில் கூடப்போகின்றது. முதன் முதலாகக் காங்கிரஸ் ஒரு சமஸ்தானத்தில் இம்முறையே கூடுகின்றது. இக் காங்கிரஸ் கூடும் தினங்கள் ஜெயப்பூரில் அரசாங்க விடுதலை நாட்களாகக் கருதப்படும். காங்கிரஸ் தலைவராகும் பட்டாபி சீதாராமய்யா அவர்கட்கு மிக விமரிசையான வரவேற்பு நடத்த ஆயத்தங்கள் கையாளப்படுகின்றன. 55-வது காங்கிரஸ் என்பதற்கு அறிகுறியாக 55 ஒட்டகங்களால் இழுக்கப்படும் இரதத்தில் தலைவர் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படுவர். எத்தனையோ அரிய விஷயங்கள் இந்தக் காங்கிரஸ் கூட்டத்தில் முடிவு செய்யப்படும். இந்தியா பிரிட்டிஷாருடன் சேர்ந்திருக்கவேண்டிய தொடர்பு எத்தன்மை யென்பதும் ஆலோசித்து முடிவு செய்யப்படும். பொதுவாக எல்லாத் தலைவர்களும் சமுகமளிப்பாராம். மகாத்மா காந்தியடிகளின் ஞாபகார்த்த விஷயமாக ஒரு பெரிய பொருட்காட்சியும் நடைபெறும். இந்தியா சுதந்திரம் பெற்றுவிட்டபடியால் காங்கிரஸ் மகாசபையின் தொண்டு இனி எவ்விதம் நடந்து செல்ல வேண்டுமென்பதையும் இச் சபையினர் முடிவு செய்வார்.

### எல்லைப்புறங்களிற் கலகம்

பாகிஸ்தான் இந்தியா ஆகிய இருநாடுகட்கு மிடையிலுள்ள எல்லைப் பிரதேசங்களில் இடைவிடாது கலகங்கள் நடக்கின்றன. காவலாக நிற்கும் போர்வீரரைச் சுட்டுக் கொல்லுகின்றனர். ஒருவருடைய நாட்டிற்குள் மற்றைய நாட்டினர் புகுந்து சூறையாடிச் செல்கின்றனர். இதை இந்த இரண்டு அரசாங்கத்தினரும் ஆலோசித்துத் தடுக்க வேண்டிய முறைகளைக் கையாளவேண்டும். அப்படிச் செய்யாவிடின் காலத்தில் பெரிய தீமைகள் வந்தெய்தக் கூடும். சமீபத்திற் கிழக்கு—மேற்கு வங்காள எல்லையில் பாகிஸ்தான போர் வீரருக்கும் இந்தியபோர்வீரருக்கு மிடையில் ஏற்பட்ட யுத்தத்தால் அநேகர் உயிர் மாண்டதாகப் புதினங்கள் கூறுகின்றன. எல்லையைத் தாண்டிச் செல்லவேண்டிய அவசியம் யாதோ தெரியவில்லை.

### சீக்கியர் உரிமைகள்

இதுவரையும் வகுப்புவாதம் பாராட்டாதிருந்த சீக்கியர் இப்போது இந்தியா கூறுக்கப்பட்டதன் பேறாகத் தாமும் பிரத்தியேகமாக வாழ விரும்புகின்றனர். கிழக்குப் பாஞ்சாலத்திற்றான் இப்போது எல்லாச் சீக்கியரும் வந்து சேர்ந்துள்ளார். அங்குதமக்கு விசேஷ உரிமை வேண்டு

- இந்தியா -

மென்ற வாதம் இப்போது கிளம்பி இருக்கின்றது. சீக்கியருடைய ஸ்தாபனம் ஒன்றுளது. அதன் பெயர் அகாலி மண்டல். அச்சபையினர்தான் இப்போது இவ் விஷயமாகப் புகார்கிளப்புகின்றனர். ஆனால் வேறு அநேக சீக்கிய தலைவர்கள் இவ்விஷயத்தை ஆமோதிக்கவில்லை. தாம் இந்துக்களுடன் சேர்ந்து சமஉரிமை பெற்று வாழ்வதே முறை யென்பது இவர்கள் அபிப்பிராயம். இவ்வளவும் அமைதியாக இருந்துவிட்டு இப்போது இம் முறையாக விவாதங்களை உண்டாக்குவது நூதனமாகின்றது. தேசியநோக்குடைய சீக்கிய தலைவர்கள் இதற்கு இடங்கொடுக்கமாட்டார் என நம்பலாம்.

### என்றும் ஆயத்தம்

இந்திய அரசினரின் இராணுவ பெலத்தை மிக எளிதாகப் பாகிஸ்தான் கருதுவது மி.க வேடிக்கையாகின்றது. காஷ்மீர் விஷயமாக யுத்தசன்னதங்காட்டுவதும் விந்தையாகின்றது. யுத்தம் எப்படின்திடமாக நின்று சத்துராதிகளைத் துரத்த என்றும் ஆயத்தம் என்று இந்தியாவின் பாதுகாப்பு மந்திரியாராகும் பலதேவசிங் கூறினர். இந்தியப் போர்வீரர்கள் தமது நாட்டிற்காக எவ்வித தியாகங்களையும் செய்யத் தயார். ஹைதராபாத், காஷ்மீர் முதலிய சமஸ்தானங்களில் இவர்களின் திறமையை அறிந்தும் பாகிஸ்தான் படபடப்பது எதற்கெனத் தெரியவில்லை. சர்தார் படேலும் பாகிஸ்தானின் பயமுறுத்தலுக்கு இந்தியா அசையப்போவதில்லை யென்றார். இந்திய சைனியங்கள் கடந்த யுத்தத்தில் பல இடங்களில் நின்று யுத்தஞ்செய்து பயிற்சி பெற்றுளரென்பது யாவரும் அறிந்த விஷயம்.

## துரத்தியடிக்கக்கூடாது

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்துவிட்ட தவறை உணர்ந்து திருத்திக்கொள்ள இலங்கை மந்திரிசபைக்கு இன்னும் சந்தர்ப்பம் இருக்கிறது. இருநாடுகளுக்கும் நட்பு முக்கியம். இது இலங்கைக்கு ரொம்ப அவசியமென்பதை மீண்டும் எச்சரிக்கை செய்கிறோம்."

இலங்கைச் சர்க்கார் பிடிவாதம் என்ற தலைப்பில் தினமணி நீண்டதோர் தலையங்கம் எழுதியிருக்கின்றது. முடிவுரையாக அது குறிப்பிடுவதாவது: மொத்தத்தில் இலங்கை சர்க்காரின் மனப்பான்மை...... திருப்தியளிப்பதாக இல்லை. புதிதாக இலங்கையில்வந்து யாரும் குடியேறக் கூடாது என்று ஏற்பாடு செய்தால் அதைப்பற்றி இந்தியாவுக்கு ஆக்ஷேபனையில்லை. ஏற்கனவே 10 வருஷம் 20 வருஷம் இருந்தவர்களை அகதிகளாகத் துரத்தியடிக்கக்கூடாதென்பதுதான் இந்தியாவின் கோரிக்கை. எவ்வளவோ நேசபாவத்துடன்...... கண்ணிய புத்தியுடன் நேருஜி யோசனை கூறினர். இதை நிராகரித்ததன்மூலம் இலங்கை சர்க்கார் 'சிறுபிள்ளைத்தனமாக' நடந்துகொண்டிருக்கிறது........ இந்தியாவின் நட்பைப் பெறுவதற்குப் பதிலாக இந்தியாவின் மனக் கசப்பையே இலங்கை சர்க்கார் தேடிக்கொண்டிருக்கிறது."

இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற ஆங்கிலத் தினசரியும் பாரததேவி என்ற தமிழ்த் தினசரியும் இதே ரீதியிற்றான் இலங்கை அரசாங்கத்துக்குக் கசப்பான சில உண்மைகளைக் கூறியுள்ளன.

## குழந்தைகள் வாரம்

ஐ. நா. சங்கத்தின்; குழந்தைகள் ஸ்தாபன நிதிக்குத் தாராளமாகப் பண உதவி செய்யுமாறு கோரி இலங்கை சார்பில் இம்மாதம் முதலாம் திகதி வசூல்நிதி ஆரம்பமா[illegible] வாரம் [illegible] நடைபெறும்.

# அமரகவி பாரதி

**இம்மாதம் 2-ந் திகதி (கார்த்திகை மூலம்) பாரதியாரின் திருநாளைத் தமிழ் உலகு கொண்டாடிற்று.**

உண்மைக் கவிஞன் என்றால் அவனுக்கு முதலாவதாகப் பரந்தநோக்கு, இரண்டாவதாக மனிதனின் இயல்பை நன்றாக அறிந்து பாடுந்திறன், மூன்றாவதாக ஊனக் கண், கற்பனைக் கண், கருத்துக்கண் ஆகிய மூன்று கண்களையுங் கொண்டு பொருள்களினூடே கூர்ந்து ஆராயும் ஆற்றல், நான்காவதாக மனிதனையும் கடவுளையும் இணைக்கும் உண்மைக் கவிதை— இவை இன்றியமையாதன. ஒரு கவிஞன் இங்ஙனம் பண்பட்டிருப்பானேல் அவன் கவிதை என்றும் அழியாது; கற்போர் மனதைவிட்டு அகலாது; அன்புப் பெருக்கால் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவி கொள்ளச்செய்யும் தகைமையதாகும்.

* * *

நம் நாட்டில் மக்கள் படுந்துயரை மறந்து, தன் கவிதையுலகில் ஈடுபட்டிருந்தானேயானால் பாரதி தேசியகவி எனப் புகழப்பட மாட்டான்: "தம்மைச் சூதுசெய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்—ஆத்திரங்கொண்டே இவன் சைவன், இவன் அரி பக்தன் என்று பெருஞ் சண்டையிடுவார்—கஞ்சி குடிப்பதற்கில்லார் அதன் காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்—எண்ணிலா நோயுடையார்—பிறர் காட்டிய வழியில் சென்று மாட்டிக்கொள்வார்" என்றெல்லாம் நம் நாட்டு மக்களின் பரிதாப நிலையைத் தன் ஊனக் கண்கொண்டு நுண்ணிப் பார்த்தான். பிறகு கற்பனைக் கண்கொண்டு பார்த்தான், சுதந்திர இந்தியனை.

* * *

கவிதையென்பது மனிதனையும் பரம் பொருளையும் இணைக்கும் ஒரு பாலம். கவிஞர்களில் சிலர் அப் பரம் பொருளைக் கடவுளென்பார்; மற்றையோர் அதை இயற்கையென்றோ, சக்தியென்றோ இயலென்றோ கூறுவர். எங்ஙனமாயினும், மனிதன் ஒவ்வொருவனும் அறிந்தோ அறியாமலோ அப் பரம்பொருளை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறான். உண்மையை அறிந்து செல்வோர் தன் வழியிலுள்ள இன்னல்களை மதியாது தீரத்துடன் பிரயாணஞ் செய்வர். தான் போகும் பாதை எங்கேனும் இரண்டாகப் பிரியுமானால் அங்கு நின்று சரியாக நினைத்துப் பார்த்து தகுதியுடையோரின் சொற்படி சரியான பாதையில் திரும்பி நடக்க முற்படுவர். உண்மையை அறியாது செல்வோர் வழியில் வரும் இன்னல்களால் மனமுடைந்து அங்கேயே தங்கிவிடுவர். கிளைப் பாதைகள் வந்து கூடுமிடத்து என்ன செய்வது என்று அறியாது தவிப்பர். பின்னர், தவறான பாதையிற் சென்று மேன்மேலும் துன்பத்திற்குள்ளாவர். இங்ஙனம் தடுமாறுவோருக்கு வழிகாட்டியாக நிற்பவனே உண்மைக் கவிஞன். கடவுளை மறந்து அன்பை மறந்து பாடமாட்டான் அமரகவி. உண்மைக் கவிதையென்றால் அது மனிதர்களுக்குக் கடவுளைக் காட்டும் சக்தி பெற்றிருக்க வேண்டும். துன்பக் கடலைத் தாண்டுவிக்கும் அன்புத்தோணியாக இருக்கவேண்டும். இதற்கு முதலாவதாக கவிஞனே அச் சக்தியைப் பெற்றிருக்க வேண்டும். பாரதி காண்கிறான் கண்ணனை. தூரத்தே நின்று தான்செய்யும் குற்றங்களுக்காகத் தன்னைத் தண்டிக்கும் ஒரு கொடிய அரசனாகவா? அன்று. "மழைக்குக் குடை, பசிநேரத்துக்குஉணவு, என்றன் வாழ்வினுக்கு எங்கள் கண்ணன்" என்கிறான் பாரதி. உண்ண உண்ணத் தெவிட்டாத உயிரெனும் முலையினின்றெடுத்த உணர்வெனும் பாலை வண்ணமுற வைத்துத் தனக்கு ஊட்டுமோர் தாயாகவும் காண்கிறான். மற்றுந் தன் சேவகனாகவும் காதலனாகவும் காதலியாகவும் "தன் இன்னருளை நாடிய நாடு அவலம் நீங்கிப் புகழில் உயர" செய்விக்கும் அரசனாகவும் காண்கிறான் அக் கண்ணனை. இதுவே அமரகவியின் தனிப் பெருமை. தன் பாடல்களின் மூலம் கண்ணன் திரு முகத்தைக் கண்டு ஆனந்திக்கும் பேற்றை, மனிதருக்கெல்லாம் தந்து போனான் பாரதி.

தன்னைச்சுற்றி யுள்ளாரை நன்கறிந்து, அவர்களுக்கு வேண்டுவன செய்து, தான் நுகரும் இன்பங்களை யெல்லாம் அவர்களும் நுகருமாறு செய்வித்து, உண்மைக்கவிதை யெனும் பாலத்தின் மீது அவர்களை அழைத்துச் சென்று கடவுளின் திரு முகத்தைக் காட்ட முனைந்த கவியே உண்மைக் கவி—ஆனந்தத்திற்கு வழிகாட்டும் நித்திய தோழன் —ஆன்மாவை உலகிலும் உலகை ஆன்மாவிலும் விளக்கும் பெரியோன். உள்ளத்தின் ஒளியை வெளியிடும் கவியே தெய்வக் கவி, தேசக் கவி, அன்புக் கவி, அமர கவி என கே. எஸ். நாகராஜன் 'காலச் சக்கரம்' இதழில் எழுதியுள்ளார்.

## சீனம் படும்பாடு

ஸுசௌநகரைச் சீன அரசாங்கம் கைவிடுகின்றது.

அங்கிருந்து வெளியேறிவிடுமாறு தம் படைகளுக்கு அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

தலைநகருக்கு சுமார் 100 மைல் வடமேற்கி லுள்ள பெங்பூ நகருக்காக கடும்போர் நடக்கிறது.

சில கொம்யூனிஸ்ட் படைகள் பெங்பூவைத் தாண்டிச் சென்று யாங்ஸியாங் நதிக்கரையை நெருங்கிவிட்டன.

நாங்கிங்நகருக்குவடகிழக்கிலும் வடமேற்கிலும் யாங்ஸீ நதியைக் கடக்க கொம்யூனிஸ்ட்டுகள் முயற்சிக்கலாமெனத் தெரிகிறது. இதைத் தடுப்பதற்காக சீன அரசினரின் கடற்படை அனுப்பப்பட்டிருக்கிறது.

பெங்பூவுக்கு அதிகமான சீன அரசாங்கப் படைகள் அனுப்பப்பட்டுள்ளன. இதற்குப் 18 மைல் வடக்கே கொம்யூனிஸ்ட்படைகள் அணுகிவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கேற்ற பாடத்திட்டம்

## தாய்மொழியிற் சிந்தித்தல்

"இலங்கைப் பாடசாலைகளின் பாடத் திட்டங்கள் ஓரளவில் முந்தையிலும் பார்க்க விசாலமாயும் பொருத்தமாயும் இருக்கின்றன. ஆனால் சமூக வாழ்விற்குப் பூரணமாயுகந்தவையோ என்பது ஐயத்திற்கிடம். சூழற்கேற்ப அவ்வச் சமூகத்திற்கு உதவப் பாடங்கள் அமைக்கப்படல் வேண்டும். தாம் கொள்ளப்போகின்ற காணியையேனும் அளந்து பரப்புக்காணத்தெரியாத மாணவர் எத்தனை ஆயிரம்? தந்தி எழுதத்தெரியாத, 'மணி ஓடர்' அனுப்பத்தெரியாத 'பெட்டிசம்' எழுதத் தெரியாத மாணவர் எத்தனைபேர்? தாம் பெறும் சம்பளத்தை வரவு செலவு முறையாய் வைக்கத் தெரியாது அல்லற்படும் ஆசிரியர்மார் எத்தனைபேர்? ஆனதுபற்றியே பொதுவாக இலங்கைச் சமூகத்திற்கும் விசேஷமாய் மாகாணச் சூழல்களுக்கும் ஏற்ப பரீட்சை வினாக்களிருப்பின் ஒருவாறு உதவும்."

இவ்வாறு சமீபத்தில் நடைபெற்ற வேலணை அரசினர் மத்திய கல்லூரிப் பரிசளிப்பு விழாவின்போது அதன் தலைமை ஆசிரியர் ஸ்ரீ ஏ. கே. கந்தையா அவர்கள் தமது அறிக்கையில் கூறினார்கள்.

இந்நாட்டுச் சட்டத்தின் சாராம்சம் பாடத் திட்டத்தில் ஓர் பாடமாக இடம் பெறவேண்டுமெனவும் அவர் யோசனை கூறினார்.

### தமிழிற் சிந்தித்து வளர்தல்

கல்விப்பகுதி பிரதம உதவி வித்தியாதிகாரி ஸ்ரீ கே. எஸ். அருணந்தி மேற்படி பரிசளிப்பு விழாவிற்குத் தலைமை வகித்துப் பரிசுகளை வழங்கினார். புதிய கல்வித்திட்டத்தில் ஆங்கிலத்திற்கும் தமிழ்மொழிக்கும் உள்ள உரிய இடங்களை அவர் குறிப்பிட்டார். ஆங்கிலம் அகில உலகபாஷையானபடியால் அது மேலும் இலங்கைக் கல்வித்திட்டத்தில் இடம்பெற்று வருமென்றும் ஆனால் உயர்தர ஆங்கிலக் கல்வி எல்லோருக்கும் பிரயோசனப்படாதென்றும் ஆங்கிலக்கல்வி ஒருகருவியேயன்றி இலட்சியம் அன்று என்பதை நாம் மறந்துவிடக் கூடாதென்றும் அவர் கூறினார். ஆங்கில மோகத்தில் நாம் நமது தாய்மொழியின் உயரிய ஸ்தானத்தை மறந்துவிடக் கூடாதென்றும் ஒவ்வொரு தமிழனும் தமிழிலே சிந்தித்து தமிழிலே வளர்ந்துவர வேண்டுமென்றும் கூறித் தமது தலைமை யுரையை முடித்தார்.

கல்லூரி மாணவ மாணவிகளால் நிகழ்த்தப்பெற்ற ஆடல், பாடல் நடன நாடகங்கள் சபையோரால் பாராட்டப்பட்டன.

## சதானந்த வித்தியாசாலை நாவலர் விழா

கார்த்திகை மாதம் 8-ந் தேதி (24-11-48) செவ்வாய்க்கிழமை ஆறுமுகநாவலர் நாள் விழா அளவெட்டி சதானந்த வித்தியாசாலையிற் சிறப்புற நடைபெற்றது. பண்டிதர் திரு. க. நாகலிங்கம் அவர்கள் 'நாவலரும் யாழ்ப்பாணமும்' என்னும் பொருள் பற்றிப் பேசும்போது யாழ்ப்பாணத்தையும் இந்தியாவையும் பிணைத்து வைத்த நல்லெண்ணத்தூதுவன் நாவலர் பெருமானேயெனப் பல காரணங்கள் கூறி விளக்கினார் நாவலர்கழகங்களும் நூல் நிலையங்களும் உருவப்பட நிலயங்களும் ஆங்காங்கு ஆக்கப்பட வேண்டுமென வேண்டினார்கள்.

கடிதம்

## யாழ்ப்பாணத்திற் சங்கீதம்

### ஆலோசனைக் கூட்டம்

இம்மாதம் 5-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலுள்ள **கலாமந்த்ரம்** என்ற நிலையத்தில் ஒரு விசேஷ கூட்டம் நடைபெறும். கலையார்வமுள்ளவர்களும் சங்கீத ஆசிரியர்களும் பிரமுகர்களும் இதிற் பங்கு பற்றுவார்கள். இக்கூட்டத்தில் நம் நாட்டின் சங்கீத நிலையையிட்டு ஆலோசனை செய்து அதற்கான ஒழுங்குகள் வகுப்பார்கள்.


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[3562]


## சாவகச்சேரி பட்டின சங்கம்

### தலைவர் பதவியாருக்கு?

[நமது அரசியல் நிருபர்]

சாவகச்சேரிப் புதிய பட்டினசங்கப் பொதுத் தேர்தல் முடிவடைந்து விட்டது. எட்டு வட்டாரங்களுக்கும் எட்டுப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுள் மூவர் ஆசிரியர்கள். ஒருவர் வழக்கறிஞர். ஏனையோர் செல்வாக்குள்ளவர்கள்.

இவர்களுள் இனியார் பட்டின சங்கத் தலைவராகத் தெரிவு செய்யப்படுவார் என்பதே முக்கிய விஷயமாகும். வழக்கறிஞர் எஸ். கே. திரவியநாயகம் அவர்களின் பெயரே ஆரம்பத்திலிருந்து அடிபட்டது. இப்போது டிறிபேக்கல்லூரி அதிபர் கே. எஸ். சரவணமுத்து அவர்களும் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதால், அவரும் தலைவர் பதவிக்குத் தகுதிவாய்ந்தவர் என்ற அபிப்பிராயமும் நிலவி வருகின்றது. அரசியல் விஷயங்களில் வழக்கறிஞர்களும் நியாயவாதிகளுமே ஆதிக்கம் வகிக்க முனைந்து நிற்பதை விரும்பாதவர்கள் நாட்டிலுள்ளர். ஆகவே, அவர்கள் ஆசிரியர் ஒருவர் தலைவராவதை விரும்புகின்றனர். அப்படியானால் ஸ்ரீமான்கள் சரவணமுத்து, என். கனகசபை (ஆசிரியர்) எஸ். கந்தையாசிவம் (ஆசிரியர்) என்பவர்களில் ஒருவர் தலைவராகிக்கொள்ள வேண்டும். இவர்களில் ஒருவர் போட்டியிட முன்வரின் அந்த அபேட்சகர் வெற்றி பெறுவரோ என்பதே இன்றைய கேள்வி. ஏனைய பிரதிநிதிகள் சிலரின் ஆதரவு இவர்களுக்குக் கிடைக்குமாயின் ஆசிரியர்களில் ஒருவர் இலகுவாகத் தலைவர் போட்டியில் வெற்றி பெற்று விடலாம். ஸ்ரீ சரவணமுத்துவை ஆதரிப்பவர்களுமிருக்கின்றனர்.

வழக்கறிஞர் எஸ். கே. திரவியநாயகம் நம்பிக்கையை இழக்கவில்லை. இதற்கிடையில் இவருடைய பிரக்கிராசி நண்பர்களும் இவருக்காக முயற்சிக்கின்றனர். வேறு சில பிரக்கிராசிமார் எதிராகவும் உழைக்கின்றனர். ஸ்ரீ முத்துக்குமாரு என்ற நகரவட்டாரத்துப் பிரதிநிதிக்கு உதவித் தலைவர் பதவி கிடைக்குமாயின் ஒருவேளை அவர் ஸ்ரீ திரவியநாயகத்துக்குத் தமது ஆதரவை அளிக்கக்கூடும். எல்லாவற்றையும் சீர்தூக்கிப்பார்க்கும்போது இன்றைய நிலைமையில் ஸ்ரீ திரவியநாயகம் அவர்கள் பாடு மோசமில்லையென்றே குறிப்பிடவேண்டும். நாட்செல்லச்செல்ல நிலைமைமாறி எதிர்பாராத காரியங்களும் நடைபெறக்கூடும்.

தலைவர் தெரிவு 1949-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்தில் நடைபெறுமென அறியக்கிடக்கின்றது. இதற்கிடையிலே தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் பெயர்களும் அரசாங்க சமாச்சாரப் பத்திரிகையிற் பிரசுரமாகிவிடும்.

சாவகச்சேரிப் பகுதிப் பிரதிநிதி ஸ்ரீ வி. குமாரசுவாமி அவர்கள் பட்டினசங்கத் தேர்தல் விஷயத்தில் எப்படி நடந்து கொள்ளப் போகின்றார் என்பதையும் மக்கள் கவனித்து வருகின்றனர்.

## நுணுவில் வட்டாரங்கள்

சென்ற மாதம் 27-ந் திகதி நடைபெற்ற சாவகச்சேரிப் பட்டினசங்கத் தேர்தலிற் பின்வரும் இரு ஆசிரியர்கள் வெற்றிபெற்றனர்.

நுணுவில் கிழக்கு வட்டாரம்: ஸ்ரீ கே. எஸ். சரவணமுத்து.

நுணுவில் மேற்கு வட்டாரம்: ஸ்ரீ எஸ். கந்தையாசிவம்.

தேர்தல்களின் போது சாவ[illegible] யும், செவ்வனே செய்து முடித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மந்திரி பொன்னம்பலம்

### யாழ்ப்பாணத்தில் வரவேற்பு

யூ. என். பி. மந்திரி சபையைச்சேர்ந்த இராணி அப்புக்காத்து ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் சமீபத்தில் ஐரோப்பாவிலிருந்து திரும்பினார். மந்திரியார் சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது அவருக்கு நகர மண்டபத்திற் சிறந்தவோர் வரவழைப்பு அளிக்கப்பட்டது.

## யாழ்ப்பாணம் நகரசபை

### 3 வட்டாரங்களில் தேர்தல்

சனிக்கிழமையன்று (4-12-48) பின்வரும் அபேட்சகர்கள் போட்டியிட்டனர்:

1—கோட்டை வட்டாரம்: ஸ்ரீ ஆர். ஆர். நல்லையா (சுயேச்சை) ஸ்ரீ ஸி. டி. இராஜா (தமிழ்க்காங்கிரஸ்).

2. 2-ம் வட்டாரம்: ஸ்ரீ பி. எம். யோன்; ஸ்ரீ ஜே. பற்றிக்.

3. 3-ம் வட்டாரம்: ஸ்ரீ நெவின்ஸ் செல்வத்துரை (த. கா.) ஸ்ரீ ரீ. ஜேம்ஸ்.

## புதிய கொழும்பு அத்தியட்சகர்

புதிய கொழும்பு அத்தியட்சகர் டிசம்பர் 17-ம் திகதி லண்டனிலிருந்து இலங்கைவந்து சேருவார். புதிய அத்தியட்சகருக்கு இம்மாதம் 21-ம் திகதி முகத்துவாரத்து கிறிஸ்தவ தேவாலயத்தில் வைத்து பட்டம் சூட்டு விழா நடைபெறும்.

## கல்லோயாத் திட்டம்

### ஒப்பந்தம் செய்யப்பட்டது

கல்லோயா அணைகட்டுத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு அமெரிக்காவிலுள்ள ஸ்தாபனம் ஒன்று இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு 500 இலட்சம் ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

## நல்லூர் சைவ இளைஞர் சங்கம்

நல்லூர் ஸ்ரீ காமாட்சி அம்பாள் சைவ இளைஞர் சங்கத்தின் ஆதரவில் நாவலர் தினத்தை முன்னிட்டு சமயம், வியாசம் என்பனவற்றில் போட்டி நடைபெற்றது. பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:

**சமயம்**

மேற்பிரிவு: ஆர். இரத்தினதுரை 1-ம் பரிசு. எம். விசுவலிங் 2-ம் பரிசு.

கீழ்ப்பிரிவு: ரீ. தர்மலிங்கம் 1-ம் பரிசு, ஏ. வேதநாயகம் 2-ம் பரிசு.

**வியாசம்**

மேற்பிரிவு: என். விசுவலிங்கம் 1-ம் பரிசு.

கீழ்ப்பிரிவு: கே. கணேசலிங்கம் 1-ம் பரிசு. ரீ. தர்மலிங்கம் 2-ம் பரிசு.

—கடிதம்

## ஐக்கிய நாடுகள் சங்கம்

### இலங்கையின் கதி

ஐக்கிய நாடுகள் சங்கத்தில் இலங்கையைச் சேர்ப்பதற்காக வாக்கெடுத்த ஒழுங்குமுறை தவறாக இருந்த காரணத்தால் பின்வரும் நாடுகள் வாக்களிக்கவில்லை. அவையாவன. கௌதமாலா, ஹைதி, ஸ்விடின், இந்தியா, பாக்கிஸ்தான், பர்மா.

இலங்கையைச் சேர்க்கக் கூடாதென்ற கருத்து இந்தியாவுக்கில்லையெனவும் சட்ட ஒழுங்குமுறைதான் தவறெனவும் இந்தியாவின் சார்பாக ஸ்ரீ சிவராவு தெரிவித்தார்.

## இலங்கை வானொலித் தமிழ்க்கலை மன்ற

### மகாசபைக் கூட்டம்

இச்சங்கத்தின் மகாசபைக் கூட்டம் இம்மாதம் 5-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை 5-12-48 காலை 9-30 மணிக்கு கொழும்பு மேட்டுத்தெரு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெறுமென மன்றத்தின் செயலாளர் ஸ்ரீ நா. பாலச்சந்திரன் தெரிவிக்கின்றார்.


## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

*Testy No.* 907

In the matter of the estate of the late **Ledchumy** wife of **Murugan Kanthan Karthy** of Chunnakam.

*Deceased*

**Murugan Kanthan Karthy** of Chunnakam.

*Petitioner*

Vs

1. Sithampary Nagenderan
2. Sithampary Kandaiah
3. Sinnappu Kandaiah and wife
4. Chellammah all of Chunnakam.

*Respondents*

This matter coming on for disposal before R. R. Selvadurai Esquire District Judge Jaffna on the 15th day of November 1948 in the presence of T. Kumaraswamy Proctor on the part of the petitioner and his affidavit and petition having been read. It is ordered that letters of administration to the state of the deceased abovenamed be granted to the petitioner as widower of the deceased and that the same be issued to him unless the respondents or any other person or persons, interested in this matter shall appear before this Court on or before the 13th day of December 1948 and show cause to the satisfaction of this Court to the contrary.

This 15th day of November 1948.

Sgd. **R. R. Selvadurai**
District Judge

Drawn by
T. Kumaraswamy
Proctor & Petitioner

[3572-ii]



இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.


பள்ளிக்கூடத் தேவைக்கான:

| | | |
|---|---|---|
| தினவரவு இடாப்பு | — | 1-50 |
| லீவு ,, | — | -50 |
| 'Q' செடூல் சேட்டிபிக்கற் புத்தகம் | | 1-00 |
| தவணைப் பரீட்சை இடாப்பு (சிறியது) | | 2-50 |
| ,, (பெரியது) | | 3-50 |

விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

சுன்னாகம்: தனலக்குமி புத்தகசாலை




## தலைநிமிர்ந்து நடக்கணும்!

**அல்வாய் தணிகாசலம், மே. 9.**

1. நாடுநகரம் செழிப்படைய நாங்கவழி செய்யணும்
நாட்டுக் குரியவங்க நாங்களென்று தெரியணும்.

2. ஏழை எளியவங்க உயர்வுக்காக உழைக்கணும்
தோழமை உணர்ச்சியோடு நமது தொண்டைச்செய்யணும்

3. சாதிமத பேதமறச் சலியா துழைக்கணும்
வேதியரும் வேறெவரும் நீதியாக நடக்கணும்.

4. தமிழராட்சி தொன்மைபோலத் தழைத்தநன்கு வாழணும்
தமிழரென்ற பெருமையோடு தலைநிமிர்ந்து நடக்கணும்.

5. வஞ்சனைபொய்சூது வாதுகொலையிவற்றைநந்துலைக்கணும்
நஞ்சுநினைவு சிறிதுமின்றி நல்லோராக வாழணும்.

6. நாலுமுழத் துணியுடுத்து நாம் நடந்துபழகணும்
நாலுபணம் சம்பாதிச்சு நாடறிய வாழணும்.

7. கம்பனொத்த கவிகளுக்குக் கனவுமாடம் கட்டணும்
எம்பெருமான் காந்திஜீயை இடைவிடாமல் வணங்கணும்.

---

### பரிசுபெற்றவர்கள்

**மேற்பிரிவு**
**சு. கோகிலதேவி, மே. 139**
**கீழ்ப்பிரிவு**
**சி. ஆறுமுகசாமி, கீ. 17**

**பரிசுகள் 10-12.48 ல் அனுப்பப்படும்**

### விடை

ஜகந்நாதன் மருந்துச் சரக்கு வியாபாரி என வைத்துக் கொண்டால்—

ராமநாதன் தையற்காரனாக இருக்கவேண்டும் (3)

ஆனால் ராமநாதன் தையற்காரனாயின், வினசித்தம்பி மருந்துச்சரக்கு வியாபாரியாகவேண்டும் (2)

மேலும், சின்னத்தம்பி, பெரியதம்பி, இருவருள் ஒருவர் மருந்துச்சரக்கு வியாபாரியாயிருக்கவேண்டும் (1)

ஆகவே அங்கே மூன்று மருந்துச்சரக்கு வியாபாரிகள் இருக்கவேண்டும்.

ஆனால் இது உண்மையல்ல. இதிலிருந்து ஜகந்நாதன் மருந்துச்சரக்கு வியாபாரி அல்லவென்று தெரிகிறது.

**ஜகந்நாதன் ஒரு தையற்காரன்**

---

## மாமா பதில்

**ச. லோகேசுவரன், கீ.176:** பிறந்த திகதியைப் பிழையாகக் குறிப்பிட்டிருக்கின்றீரே போட்டிப்பத்திரத்தில்.

**இ. இரத்தினசபாபதி, மே.61:** போட்டியில் எதற்காக உமது இலக்கம் குறிப்பிடப்படவில்லை?

**வி. முருகப்பா, கீ.230:** எதற்காகப் போட்டியுடன் கடிதம் எழுதினீர் மருமகனே?

**அ. விக்னேஸ்வரன், மே. 45:** மருமகனே கடிதம் எழுதும்போது இலக்கத்தையும் குறிப்பிடும்படி எழுதின பத்திரிகைகளை முன்பு வாசிக்கவில்லையா?

**அ. ரவீந்திரன், மே.8:** மருமகனே! எழுதும்போது இலக்கத்தையும் குறிப்பிடவேண்டும்.

**சந்திரா அரியகுட்டி, கீ.3:** உமது இலக்கம் கீ. 3: கடிதங்கள் எழுதும்போது உமது பெயருக்குப் பின்னால் இதையும் குறிப்பிடவேண்டும் மருமகளே!

**சி. சரவணபவன், மே. 175:** பிறந்த திகதியில் வித்தியாசம் இருக்கிறதே!

**வி. சுப்பிரமணியம், மே. 80:** மேற்கூறிய பதிலைப் பாரும்.

**இ. பேரின்பநாயகம், மே. 222:** நீர் விரும்பியவாறு 5-ந் திகதி வரையும் உமக்கு விடுதலையளித்திருக்கிறேன். நீர் எழுதியனுப்பிய பாக்கள் மிகவும் நன்றாயிருக்கின்றன.

**இ. புவனேஸ்வரியம்மாள், மே. 163:** கீழ்ப்பிரிவில் உம்மைச் சேர்த்ததற்காக மன்னிக்கவும். ஈழகேசரி ஆண்டு மலர் வெளிவராது மருமகளே! உமது கட்டுரை கிடைத்தது.

**அல்வாய் தணிகாசலம், மே. 9:** பதில் கிடைக்கவில்லையென்பது வருத்தமாகவிருக்கிறது. இப்பொழுதாவது கிடைத்திருக்குமென நம்புகிறேன். காந்திஜீயைப்பற்றிய கவிதை நன்றாயிருக்கிறதே! பத்திரிகைகளும் கிடைத்தனா? விலாசம் எழுதும்போது அனுப்புபவர் குறிப்பில் உமது பெயரையிட்டு அதன் கீழ் May 9 என்று போட்டிருக்கிறீரே ஆங்கிலத்தில், அதன் கருத்து யாது? மே. 9: என்பது மேற்பிரிவில் 9 வது இலக்கமே.

தென்னிந்தியப் பாணியிலே
தேவையற்றேன் பாடணும்
உன்னுடைய பாஷையிலே
உருக்கமாகப் பாடவும்.

**சு. கோகிலதேவி, மே. 139:** மேற்பிரிவின் பரிசு அடித்து விட்டீரே. 10-ந் திகதி பரிசு அனுப்பப்படும்.

**சி. ஆறுமுகசாமி, கீ. 17:** உமது கட்டுரை கிடைத்தது. பிரசுரத்திற் கேற்றதாயில்லை. [illegible] இரம் நன்றாயிருக்கிறது. அதற்குத்தான பரிசு கிடைத்திருக்கிறதே.

---

## மயிலிறகு குஞ்சு பொரித்தவிதம்

**அ. டே. குலராசா மே.38**

ஒரு நாள் இராணியின் தம்பியாகிய 'ராசன்' தன் அக்காளிடம் ஓர் மயிலிறகைக் கொடுத்து, "அக்கா இந்த மயிலிறகை உன்னுடைய புத்தகத்துக்குள் வை, நாளைக்குக் குஞ்சு பொரித்தபிறகு நீ ஒரு குஞ்ச் எடுத்துக்கொண்டு மற்றக்குஞ்சை எனக்குத் தா" என்றான். அக்காளும் சிரித்துவிட்டு "இராசன் இது குஞ்சு பொரிக்கமாட்டாது. இது மயில் இறகு,, என்றாள். உடனே ராசன் மயிலிறகைத் தனது புத்தகத்திற்குள் வைத்துவிட்டு "நான் உனக்கு இரண்டு குஞ்சுகளையும் காட்டுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே சென்றுவிட்டான்.

ராசன் இம் மயிலிறகைப் புத்தகத்துடன் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டுபோய்த் தனது நண்பரிடம் காட்டினான். அவர்களும் நம்பி, "எனக்கு ஒரு குஞ்சு', "எனக்கொருகுஞ்சு" என்று சொல்லிக் கொண்டே ராசனை வளைத்து நின்றார்கள். அப்பள்ளிக் கூடத்தில் தலைமை ஆசிரியையாகவிருந்தராசனின் தாயார் ராசனை "ராசு; புத்தகத்திற்குள் என்ன வைத்திருக்கிறாய்? என்று கேட்டார்.

> ### பிறந்ததின வாழ்த்துக்கள்
> **5-12-48 — 11-12-48**
> **மே. 23. கா. சிவப்பிரகாசம்; மே. 117. பொ. ரஞ்சிதாதேவி; மே. 142. சு. சற்குருநாதன்.**
>
> மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக.

உடனேராசன்தனதுதாயாரிடம் அதைக் காட்டி "அம்மா; இது குஞ்சு பொரிக்குமெல்லோ? என்று கேட்டான் தாயாரும் அவன் முதுகில் தட்டி "இந்த மயிலிறகை எண்ணெயில் தோய்த்துப் புத்தகத்திற்குள் வைராசு! நாளைக்குப் பொரிக்கும்" என்று கேலியாகச் சொன்னார். உடனே இராசன் "அக்கா இது குஞ்சு பொரித்தால் உனக்கொரு குட்டு, பொரிக்காவிட்டால் எனக்கொரு குட்டு" என்று சொன்னான். சாப்பிடும் நேரம் வந்ததும் ராசன் சாப்பிடச் சென்றான். சாப்பிடும் சமயம் ராணியும் அங்கு வந்தாள். வந்ததும் ராணிதாயாரைப் பார்த்து "அம்மா ஒரு பிள்ளை குட்டு வேண்டப்போகுது" என்று சொன்னதும் ராசன்'நாளைக்கு ஒருபிள்ளை குட்டுவாங்கப் போகுது" என்றான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த தாயார் ராணியைப் பார்த்து "ராணி! நீ போ ராசனைச் சாப்பிடவிடு" என்றார். ராணி போனதும் ராசன் மயிலிறகை மறந்து விட்டான்.

மறுநாட் காலை ராசன் எழுந்ததும் மயிலிறகின் நினைவு டன் அதுகிடந்த இடத்திற்குச் சென்றுபார்த்தான். ஆனால் அங்கே ஒரே ஒரு மயிலிறகைக் கண்டான். பின்பு அவன் வேறு இரு இறகுகளைக் கொணர்ந்து முன்னிருந்த இறகுடன் கூடவைத்து மூடினான். பின்பு அக்காளை அழைத்து வந்து காட்டினான். அவளும் ஆவலுடன் வந்து பார்த்தபோது இரு இறகுகள் கூடஇருப்பதைக் கண்டு பிரமித்து நின்றாள். உடனே ராசன் அக்காளின் தலையில் குட்டினான். அவளும் தம்பியுடன் சண்டைபோடுவதில் என்ன பயன் என்று நினைத்து ராசனைக் கூப்பிட்டு "ராசு! நான் ஒரு இறகை எனது புத்தகத்திற்குள் வைத்து விட்டு வருகிறேன். குஞ்சு பொரிக்கிறதோ என்று பார்ப்போம்" என்றாள்.

காலை எழுந்து பார்த்ததும் முன் வைத்திருந்த இறகுமாத்திரம் இருப்பதைக்கண்டு ராணி "ராசு இங்கே வந்து பார். முன் வைத்த இறகு மாத்திரம் இருக்கிறது" என்றாள்.

ராசு, தான் முதல்நாள் செய்த திருட்டுத்தனத்தைக் கூறி ராணியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

---

தொடர் கதை

## சாந்தா

**சு. காந்திமதி மே.145**

அன்று சுகுமாரனுக்கு வழக்கம் போல கந்தோரில் வேலை செய்ய மனம் வரவில்லை. காரணம் அவன் தன் தங்கை சாந்தாவை அநுவசியமாகக் கோபித்ததுதான்.

நாலுமணிக்கு முன்னமே வீடு சேர்ந்தான். வீட்டில் சாந்தாவைக் காணவில்லை. ஒரு பாத்திரத்தில் காப்பியும் ஒரு தட்டில் பலகாரமும் மேசைமேலிருந்தன. சுகுமாரன் காப்பியைத் தூக்கினான். அதனடியில் ஓர் காகிதமிருந்தது. தன் நண்பனின் கடிதமென நினைத்துப் பிரித்தான். ஆனால் அது அவன் தங்கையால் எழுதப்பட்டிருந்தது. கடிதத்தை வாசித்தான்.

பட்சமுள்ள அண்ணா! எனக்கு இவ்வீட்டிலிருக்கப் பிடிக்கவில்லை. நான் எங்கேயாவும் சென்று கூலிவேலை செய்து பிழைத்துக் கொள்வேன். என்னைத் தேடவேண்டாம். ஓர் வேலைக்காரனை வைத்து உங்கள் உடம்பைக் கவனித்துக் கொள்ளுங்கள்

உங்கள் தங்கை
சாந்தா

சுகுமாரனின் தலை சுழன்றது. கண்களில் நீர் நிறைந்தது. கடிதம் கையிலிருந்து நழுவியது. பக்கத்திருந்த சாய்மனைக்கதிரையிற் சாய்ந்தான். அன்று நடந்த சம்பவம் அவன் கண்முன் ஓடிற்று. காப்பிக்குச் சர்க்கரை முடிந்துவிட்டபடியால் சாந்தா அடுத்த வீட்டு மாமியிடம் கொஞ்சம் வேண்டலாமெனப் போனாள். சுகுமாரனுக்கு நேரமாகிவிட்டது. அடுப்பங்கரைக்குச் சென்றான். சாந்தா அங்குமில்லை. காப்பி இன்னும் தயாராகவில்லை. அப்பொழுதுதான் சாந்தா கையிற் சர்க்கரையுடன் ஓடோடியும் வந்தாள். சுகுமாரனுக்குக் கோபம் வந்துவிட்டது. அவளை ஒன்றும் கேட்காது ஐந்து ஆறு அடி அடித்து விட்டுக் காப்பியுங் குடியாது புறப்பட்டான். ஆனால் "அண்ணா காப்பியைக் குடித்துவிட்டுப் போங்கள்." என்று சாந்தா கூப்பிட்டாள். சுகுமாரனோ அந்தக் காதில் வாங்காமற் சென்று விட்டான்.

கனவு உலகிலிருந்து விளித்தாள் சாந்தா. அப்பொழுதுதான் இருண்டுவிட்டதென அறிந்தாள். எழுந்து விளக்கை ஏற்றினாள். பின்பு ஒன்றும் சாப்பிடாமற் போய்ப் படுத்தாள்.

சாந்தா வீட்டை விட்டு வந்து கடற்கரையிலிருந்து இயற்கைக் காட்சியை அனுபவித்துக் கொண்டிருந்தாள். தன்னையே மெய்மறந்து உட்கார்ந்திருந்த அவள், பின்னிருந்துவரும் காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பினாள். சுற்றிலும் அந்தகாரம் சூழ்ந்திருந்தது. திடுக்கிட்டாள்: இதற்கிடையில் அங்குவந்த பெரியவர் "ஏனம்மா தனித்திருக்கிறாய்" என்று வினவி விட்டு ஓர் பெருமூச்சு விட்டார். அவர் பெருமூச்சுவிட்டதன் மர்மம் இவளுக்கு விளங்கவில்லை. பெரியவர் மீண்டும், "ஏனம்மா கேட்டதற்கு மறுமொழி சொல்லவில்லை" யென்றார். சாந்தா "நான் தெரியாமல் என் வீட்டை விட்டு வெளிக்கிளம்பி விட்டேன். இனி எங்கு போவது? என் கதியென்ன என்பதைச் சிறிதும் ஆலோசியாது வந்த என்னை நோவதன்றி வேறு யாரை நோவது. ஆனால் நான் திரும்பவும் வீட்டிற்குப் போகமாட்டேன்" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினாள். துக்கம் மனத்தின் கட்டுப்பாட்டிற்கு அடங்காமல் அழுகையாக மாறியது.

அப்பெரியவர் "நீ என்னுடன் வந்து என் வீட்டிலிரு" என்று கேட்டார். சாந்தா யோசித்தாள். பின்பு 'சரி' யென்று தலையசைக்கப் பெரியவரும் தன் காரில் சாந்தாவை அழைத்துக்கொண்டு தம் வீடு சென்றார்.

வறுமையிலேயே உழன்ற சாந்தாவிற்கு அப்பெரிய வீட்டையும் அங்குள்ள பொருள்களையும் பார்க்கப் பார்க்க மகிழ்ச்சியாக விருந்தது. அம் மகிழ்ச்சி ஒருபுறமிருக்கதனது அண்ணா எப்படிக் கஷ்டப்படுகிறானோ என்று ஏங்கித் துயரடைவாள்.

இப்புதிய வீட்டில் வாசம் செய்வது, சாந்தா! பெரியவர் ஒரு சிறு பெண் சமையற்காரர் பணியாட்கள். அச்சிறு பெண்ணிடமிருந்து தாய் இறந்து விட்டதாக அறிந்தாள்.

சாந்தாவைக் கண்டவுடன் அச்சிறு பெண், "அப்பா யாரப்பா இந்த அக்கா. ஒருவேளை எங்களுடைய அக்காதானோ. ஆனல அவவிட்டை இந்த மாதிரிச் சேலையில்லை. ஆரப்பா," என்று மூச்சுவிடாமல் அடுக்கிக்கொண்டே போனாள்.

"இல்லை ஹேமா இவள் உன் அக்காதான்" என்று கூறி சாந்தாவைப் பார்த்தார் பெரியவர். அவர் கண்களில் நீர் துளித்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# திருக்கோவை தெருப்பாடலா?

## விபரீத விளக்கம்

விளிசிட்டி சேர். கனகசபை வித்தியாசாலை ஆசிரியர் திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்கள் சன்மார்க்க சபையில் நிகழ்ந்த நாவலர் தினக் கொண்டாட்டத்தில் தம்மை யறியாமலே திருக்கோவை யென்னுந் தெய்வத் தமிழ் நூல்மேல் மாசேற்றிப் பேசியிருப்பதற்கு வருந்துகிறேம்.

'அறிஞர்களால் மிக உயர்ந்ததாகக் கருதப்படுவதும் நாவலர் அவர்களால் அதன் பெருமை நோக்கிப் பதிப்பிக்கப்பட்டதுமாகிய திருக்கோவையைத் தெருப் பாடல்களோடு ஒப்பிட்டு திருக்கோவைபோன்ற எத்தனையோ தெருக்கோவைகளைப் பாடுவேன் என வாய் கூசாது அந்த நவீன வித்துவான்கள் கூறுவதைக் கேட்டு யாழ்ப்பாண நாடு தன் அாதுகளைப் பொத்திக் கொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்' என்பது தாஞம் நண்பர் திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்கள் கூற்று.

அளவெட்டியில் நிகழ்ந்த மாணவர் சங்க விசேஷ கூட்டத்தில் வித்துவானொருவர் திருக்கோவையைப் புகழ்ந்து கூறிய வாக்கியங்களை விளங்காமையால் தான் பிள்ளையவர்கள் இவ்விதம் கூறினர்களென எண்ணுகிறேன்.

அளவை மாணவர் சங்கத்திற் பேசிய வித்துவான் தமது சொற்பொழிவினிடையே 'தமிழ்ப்புலவர்கள் பலர் தவறான பாதை வழியே செல்கின்றனர். சொன்னயம் பொருணயமற்ற பாடல்களைப் பாடிக் கொட்டுகின்றனர். தமிழில் எத்தனையாயிரங் கோவைகள் பாடப்பட்டிருக்கின்றன. ஒரு திருக்கோவையிருக்க இத்தனையாயிரந் தெருக்கோவைகள் எல்லாம் எதற்கு? என்னை யொருவர் உணவு தந்து ஆதரித்தால் நானும் எத்தனையோ தெருக்கோவைகளைப் பாடிக் குவித்து விடுவேன்' என்று கூறினர்கள்.

அன்பர்களே, வித்துவான் இப்படிக் கூறியதனல் திருக்கோவையைத் தெருக்கோவை என்று கூறினர் எனப் பொருள் பண்ணுதல் அறிவுக்குகந்ததா?

V. S. கந்தசாமி
அளவை மாணவர் சங்கத் தலைவர்
அளவெட்டி, 30.11.48.

---

### உமியடாவா? உரியன்தாமா?

ஈழகேசரி (28-11-48) இதழில் 'மன்னருக்கும் ஒருபெண்' என்ற தலையங்கத்தில் பண்டிதர் க. சந்திரசேகரம் அவர்கள் திரு. வெங்கைக் கலம்பகச் செய்யுளாகிய "விற்றதார்கலை பாதியோடு வனத்திலே அழவிட்டதார்" என்ற செய்யுளை விளக்கியிருந்தார். விஷயத்தின் பிற்பகுதியில் முழுப்பாடலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்பாடல், 1947-ம் ஆண்டு ஜனவரிக் கலைமகள் இதழில் நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை அவர்கள் இவ்விஷயம் பற்றி எழுதிய கட்டுரையில் உள்ள பாடலுக்கு எழுத்துக்கு எழுத்து சரியாயிருக்கிறது.

'விற்றதார்கலை பாதியோடு
வனத்திலேயழ விட்டதார்
வெஞ்சிறைப்புக விட்டதார்
துகிலுரிய விட்டுவிழித்ததார்
உற்றதாரமும் வேண்டு
மென்றினி
மன்னர்பெண்கொள லொண்ணு
மோ
உமியடாமணம் என்றவாய்
கிழித்
தோலை காற்றிலுருட்டடா.

என்பது அவர்கள் குறித்த அப்பாடலின் மூன்னிருவரிகளாம்.

ஆயின் 29.10.44 ஈழகேசரி இதழில் 'மன்னர் பெண் கொளல் ஒண்ணுமோ'? என்னும் தலையங்கத்தில் இவ்விஷயம்பற்றி வெளிவந்த கட்டுரையில்,

"விற்றதார் கலை பாதியோடு ..............
..............................................
..............................................
உரியடா மண மென்றவாய்கிழித்
தோலை காற்றி லுருட்டிடா"

என இருக்கிறது.

சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத் திரட்டு என்னும் நூலில் அப்பாடல்,

"விற்றதார்.............. ..............
..............................................
..............................................
உமியடாமண மென்ற வாய்கிழித்
தோலை காற்றி லுருட்டா"

என இருக்கிறது: இவ்வாறு இப்பாடல் பல விதத்தில் காணப்படுவதன் காரணம் யாதாயினும், இப்பாடலின் இரண்டாம் வரி இறுதி,

'உரியடாமண மென்ற வாய்கிழித்
தோலைக் காற்றி லுருட்டா'

என்றிருப்பதே சரியானதெனத் தோன்றுகிறது.

**காரணங்கள் 1.** (உரியள் + தாம் + மணம்) = உரியடாமணம் என வருமாதலின் 'இவ்வேடர் குலப்பெண் எனது மணத்துக்கு உரியள்' என ஓலை யனுப்பிய அரசனது வாயைக் கிழித்து அவன் அனுப்பிய ஓலையைக் காற்றில் உருட்டி [உருட்டா = உருட்டி; செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினை எச்சம்.] (அவ்வாசனுக்குத் தோல்வி நிகழினும், அவன் போரில் இறந்து வீர சொர்க்கம் [மனிதர்கள் விரும்பும் பேறு] அடைவானதலின் அவன் ஒரு வகையில் வெற்றியேபெற்று மோட்சம் அடைவான் என்னும் பொருளில்) 'வெற்றியாகிய மூத்தியை அவனுக்குத் தரும் வெங்கைமாநகர் வேடர் யாம்' என்றுன். வீமனும் "வானுள வானவர் கோன்தன்பதம் நல்குவேன்" என்றமை உணரற்பாற்று.

(2) தூதர் பலராதலின் அவரை நோக்கி வேடர் தலைவன் 'உமியடா உருட்டடா' என ஒருமை வாய்ப்பாட்டாற் கூறுன். தன் அயலில் நின்ற மற்ற வேடர்களுள் ஒருவனுக்குக் கூறியிருத்தல் கூடுமெனின் தன் கையில் ஓலையை வைத்துக்கொண்டு 'ஓலை காற்றில் உருட்டடா' எனக் கூறியிரான். 'மணம் என்று கூறிய வாய்' அரசனது வாயேயன்றி தூதர் வாயன்று. தூதர் ஓலை கொடுத்த அத்துணையே செய்தனர். தூதரைத் தண்டித்தல் நியாயமுமாகாது. அரசன் அவ்விடத்தில் இல்லையாகலின் அரசன் வாயைக் கிழிக்குமாறு வேடர் தலைவன் கூறியிருத்தல் பொருந்தாது.

(3) பிற்காலத்திய பாடல்களில்தான் அடா என்னும் சொல் லுபயோகத்தைக் காண்கிறேம். கலித்தொகை முதலிய நூல்களில் எடா என்னும் சொல்லை 'எலா' என வழங்கியுள்ளனர். அடா என பழைய இலக்கிய வழக்கு காணப்படவில்லை. 'சீரதம் கோட்டுமாமுனி கேட்ட சொற்படி' நூல் செய்வதாகக் கூறும் சிவப்பிரகாசர் அதனினும் வழுவி அடா என்னும் சொல்லை உபயோகித்திருப்பார் என்று சொல்வதற்கில்லை. ஆகையால் சிவப்பிரகாசர் மேற்படி செய்யுளை 'உரியடா மணம் என்ற வாய் கிழித்து ஓலை காற்றிலுருட்டா' எனவே யாத்திருப்பர் என முடிவு செய்தல் பொருத்தமானது என எண்ணுகிறேன்.

வ. நடராஜா
குரும்பசிட்டி
30-11-48

---

### மன்னூரில் வேலையற்ருேர்

மன்னூர் மாந்தைப் பிரிவுகளிலே யுத்த காலத்தில் உணவுக் கட்டுப்பாடு நெல் வாங்குந் திட்டம்போன்ற நிர்வாகங்களில் ஐந்து ஆறு வருஷகாலம் கடமையாற்றி 31-10-47 ல் சேவையினின்றும் நீக்கப்பட்டோர் இன்னமும் தொழிலின்றித் தவிக்கின்றனர்.

காகம் அன்னநடை நடந்து தன்னடையுமிழந்தவாறு இவர்கள் தமிழ் ஜே. எஸ். ஸி.; எஸ். எஸ். ஸி. படிக்கும் மாணவராயிருந்த நாட்களில் நிரந்தரமற்ற அரசாங்க சேவையில் ஈடுபட்டு வாழ்நாட்களை வீணாகக் கழித்து வாய்த்தவிடும் போய் அடுப்பு நெருப்பும் இழந்தவாருயிற்று.

எல்லோரும் பொன் பூண என் மகளோ பாத்திருப்பாளென்றவாறு எல்லோரும் தொழிற் கந்தோரிற் பதிவு செய்கிருர்களென்று இவர்களும் யாழ்ப்பாணம், மன்னூர் முதலிய தொழிற் கந்தோர்களில் மாறிமாறிப் பதிவு செய்து அலுத்தாரேயொழியப் பயனடைந்தோராயில்லை. மூன்று மாசத்திற்கொருமுறை பதிவுக்கடிதம் புதுப்பிப்பதேதொழிலாகிவிட்டது.

எங்கள் பகுதிக் கௌரவ மந்திரியாரும் எம்மீது கூடிய சிரத்தையெடுக்கிருர். ஆனாலும் நமது காலபலன் சற்றுத் தூரத்திலே நிற்கின்றது,

நம்மையீன்ற இலங்காதேவியும் தனது பிள்ளைகளில் நாட்டு மக்கள் நகர மக்கள் என்ற பிரிவினை பாராட்டாது யாவரையும் ஓரே சீராய்க் கண்காணித்து வருவாளென நம்புகிறேம்.

அடம்பன் T. T.
29-11-48

---

### மாந்தை ஐக்கிய விளைபொருட் சங்கம்

இச்சங்கத்தின் முறைகளையிட்டு 21-11-48 ல் வெளிவந்த ஈழகேசரியில் அடம்பன் T. T. என்பவர் குறை கூறியதன் சார்பாக, ஆண்டுகள் இரண்டுசென்றும் 4500 போர்வழிகள் உள்ள இப்பகுதியில் 360 பெயர்கள்மாத்திரம் அங்கத்தவர்களாக இருந்தும் அதிலும் முப்பது பேரே விளைபொருளாகிய நெல்லைக் கொடுத்தும் உதவி அளித்தனரென்ருல் இது இளமையோ? முதுமையோ? என்பதை வாசகநேயர்களின் ஆலோசனைக்கே விடுகின்றேன்.

இச் சங்கத்தின்நோக்கம் விவசாயிகள் அனைவரும் அங்கத்தவர்களாகச் சேரலாமென்பதும் அன்னோர்க்குத் தகுதிக்கேற்ப விவசாயத்திற்குத் தேவையான பணம் பண்டம் முதலியன குறைந்த வட்டிக்குக் கொடுக்கலாமென்பதும், அவர்களின் விளைவுள்ள நெல் முதலிய தானியத்தைச் சங்கத்துக்கே விற்று வளர்ச்சி பெறச் செய்வதேயன்றி வேண்டுவோர்க்கு வேண்டியளவு கொடுப்பதன்று. இரண்டு வருடத்திலும் 30 பேர் மாத்திரம் விளைந்த நெல்லிற் குறைந்த பகுதியைக் கொடுத்து முழு விலையையும் பெற்றிருக்கின்ருர்கள். ஏனையோர் கள்ளச் சந்தையை ஆதரித்து சங்க வளர்ச்சியை நிராகரித்தனர். விதைநெல் விநியோகத்தில் ஏற்பட்ட குறைபாட்டை முன்னிட்டு ரூபா 10/50 சதம் கொடுத்த நாம் வண்டி நிறைய நெல் இல்லை என்று குறைகூறுவது நியாயமாகுமா? புசல் 8 ரூபாவில் 10 வண்டி நெல்லைச் சங்கத்திற்குதவி, புசல் 16 ரூபாவில் பாதிவண்டில் ஏற்றிப்போனோர்க்கும், காழி நெல்லேனும் நயந்து ஈயாப்போழ்தும் கோணி நெல் கொண்டு போனதற்கும் இடைத்தூரம் அதிகமன்ருே.

இதுமட்டுமல்ல 1931-ம் ஆண்டின் பெருவெள்ளச் சேதத்தால் [illegible] மை செய்யும்பொருட்டு இப்பகுதிக்கு இருபதாயிரம் ரூபா வரையில் கடன்கொடுத்த மன்னூர் அவசரகால மாகாண அதிபர் திரு. சாண்டிஸ் அவர்கள் அரைவாசியும் அறவிடமுடியாமல் அரசினர்க்குக் கடன்காரனனதும் தெரிந்தமையே! அதுவுமன்றி இற்றைக்கு மூன்று வருடங்கட்கு முன் அரசினர் கடனுகக் கொடுத்த விதை நெல்லில் ஏறக்குறைய 300 புசல் வரையில் இன்றும் அறவிடமுடியாத நிலையில் இருக்கின்றன. இவர்களிலும் $2\frac{1}{2}$ ப் புசல் கடன்காரரே 90 வீதமானேர். அப்படி இருக்கும்போது வண்டி நிறைய நெல்லேற்றி விடவில்லையென குறை கூறுவது [illegible]நியாயமா?

எ. கே. பிரான்ஸிஸ்
பாலைக்குளி, அடம்பன்
29.11.48

---

## வள்ளுவரின் பெண்ணுலகு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

படிச் சொல்லவில்லையே. ஆதலால் பெண்களை ஆண்களுக் கடிமையாக்குகிருர் வள்ளுவர் எனக் கேட்டார் ஒரு எம். ஏ. வழக்கறிஞர். இது வீண் வாதம். கம்பர், வந்தெதிரே தொழுதானை, வணங்கினன் அடிவீழ்ந்தான் என்பதனல், 'தொழுதல்' என்பது கை கூப்பி வணங்குதல் எனவே கொள்ளல் சால்பு. காதலன் அடிபணிவதெனினும், அது அன்றைய வழக்கம். பெண்ணுக்குக் காதலனிடம் அன்பைக் கூற விழைந்தவர் அன்றைய வழக்கத்தை வைத்து வற்புறுத்துகிருர். அவ்வளவு தான். இன்று பணிவதில்லை; உரிமை! இன்றைய நிலையால் அன்றைய கருத்தை உரையிட்டுப் பார்த்தல் ஆராய்ச்சியல்ல. அது தவருகும்.

ஏன்! காதலியின் தோளைத் தழுவுமின்பம் தாமரைக்கண்ணன் (தேவலோகம்—வைகுண்டம்) உலகின்பத்திலும் சிறந்ததென்னும் தலைவன், காதலியை ஆண்டவனகவும், அவளின்பத்தைப் பேரின்பம்; கடவு ளின்பமு மாகத்தானே கருதினன் என உணர்கிறேம்! அப்படிப்பட்டவனைத் தெய்வமாக (தெய்வத்தைத் தொழலான்) வைத்துத் தொழுதாளென்ருல் அது அடிமையோ இழுக்கோ கருதியெழுதியதாக வள்ளுவர் உள்ளத்தை ஆராயும் எனக்குத் தோன்றவில்லை! இங்கு அவர் உணர்த்துவது அவள் அடி பணியவேண்டும் என்பதல்ல. அவள் கற்பையேயாகும்.

### பிறர்க்கே பயன்

'மனைவிழைவார் மாண்பயனெய்தார்' (பெண்வழிச்சேறல்) எனப் பெண்ணை விரும்பாதே; அவள் பேச்சைக் கேளாதே; கேடுவரும் என்பதெல்லாம் பெண்ணை இழிவாக்கி அடிமைப்படுத்துவதல்லவா? என்பது மற்ருெரு கேள்வி. இல்லறமும், செல்வமும், ஏற்றநெறியில் பிறர்க்கே பயன்படத்தான் என்பது வள்ளுவர் கருத்து; உலகில் யாவர் கருத்தும். இல்லத்தில், வருவாயைக் கையில் வைத்துக்கொண்டு நடத்தும் பெண் இவற்றை, தானே இனிமையுடன் நடத்தல்வேண்டும். கணவன் மறுத்தாலும் அவனைத் திருத்தவேண்டும். அத்தகைய கடமையுடையவள் தீநெறியிற் பொருளைச் செலவிடுவாளானல் அதுமட்டுமன்றி நன்னெறியிற் செலவிட விரும்பும் கணவனைத் தடுப்பாளென்ருல் அவள் பெண்ணு? அவள் நடத்துவது அறமா?

அப்படிப்பட்ட பெண் பேச்சைக் கேட்க வேண்டுமா? பயன்? அதைத்தான் தடுக்கிருர். அவர் பேச்சால், 'நட்டார் குறைமுடியார். நன்ருற்ருர்' ஆகின்றனர் ஆடவர், என அறிந்த வள்ளுவர் அவர்களை நன்னெறிப்படுத்தல் கடமையல்லவா?

தீமையைக் கடியவந்த வள்ளுவர், அத் தீமையை நினைப்பவன் பெண்ணுயிருந்தாலென்ன, அவள்வழிச் செல்லாதே என்ருர். அதனுற்ருன் அவர் நூல் அறநூல் ஆயிற்று. தீமை கூறினல் 'ஆண் பேச்சைப் பெண் கேட்டலாகாதென்பதும் அவர்க்கு உடன்பாடு தான். குடும்பச்செயல்களில் பெரிதும், அன்று பெண் பேச்சைக் கேட்டு நடந்தனர் ஆடவர் ஆதலாலே அதைப் பெண்களின் வாயிலாகக் கூறுகிருர். அவ்வளவே. குடும்பம் நடக்கப் பெண்வழிநில்; அதற்கென அவள் கூறும் தீநெறியையும் சேர்த்துப் பின்பற்ருதே; கெட்டுவிடுவாய் எனக் கூறவே 'பெண்வழிச்சேறல்' பாடினர். அவர் கூறியது இன்று மிகப் பொருந்தும். இன்று பெண்களின் அளவு மீறிய ஆடம்பரச் செலவை எதிர்க்காமல், மறுக்காமல், கோழைத்தனமாய் இணங்கிச் செல்வதாற்ருன் எத்தனையோ குடும்பங்கள் போதிய வருவாயிருந்தும் வறுமையால், கட்டனல் வாடுகின்றன!

### மனைக்கு மங்கலம்

இன்று பெண்களுக்களிக்கும் உரிமை ஆண்களின் அறிவு உரிமையை அடிமையாக்கி வருகிறதென்பதை அறியவேண்டும். இன்னும் சின்னுளில் ஆண்கள் உரிமை கேட்கவேண்டி வரும்! பெண்கள் உரிமை கேட்கின்றனர்; ஆனல் கடமையை மறந்து வருகின்றனர். உரிமை பிறர் தந்தாலோ; அன்றி எடுத்துக் கொண்டாலோ பயன்படாது, உரிமை இயற்கையாக, பெண்மையாக மலர்வதாகும். அதனையே வள்ளுவர் விழைகிருர்.

இன்று, மேலைநாட்டுப் பெண்களின் ஆடம்பர வாழ்வும். இயல்புந்தான் அந்நாட்டின் வருவாய்க்கு மிஞ்சிய பொருளை வேண்டியது. அதனுல் தொழிலைப் பெருக்க வேண்டி வந்தது. அதனை வாங்கப் பிற குடியேற்றநாடுகளை அடிமையாக்க நேரிட்டது. உலகில் இரண்டு போர்கள் நிகழ்ந்தன. உலகம், நாடு, குடும்பச்சேர்க்கை, குடும்பத்தில் ஆணையும் நடத்தவேண்டிவள் பெண். அவளே எளிமை கற்காவிடில், கற்பிக்காவிடில் உலகில் போர்கள் மலியும்; அமைதி வராது.

ஆகவே குடும்பத்தின், நாட்டின் சுக்கான் யார்கையில்? பெண்ணின் கையில். ஆகையாலேதான் அவளை, உலகின் உயிர், கண், வாழ்வு, கடவுள் எனவெல்லாம் வாழ்த்தினர்; வணங்கினர்.

'மங்கலமென்ப மனைமாட்சி' என்கிருர். ஒரு வீட்டை விளங்கச்செய்வது பெரிய மின்சார விளக்குகளா? கட்டிட உயர்வா? சிற்பச் சிறப்பா? உள்ளே அமையும் மேசை, நாற்காலிகளின் மேன்மையா? அல்ல; அல்ல, வீட்டை விளங்க வைப்பவள், குடும்பத்திற் கழகு, மனைக்கு மங்கலம் பெண் பெண். அவர் தந்த பெருமையைப் பெண்ணுலகு காப்பாற்றவேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4)

# மன நிழல்

துன்பங்களெல்லாம் அடுத்துவரும் இன்பங்களின் சூசகங்களென்று யாரோ சொன்னூர்கள். அந்த உண்மை என்மட்டில் எதிர் மாருகத்தான் காட்சியளித்தது. இந்தக் 'காலம்' ஈவிரக்கமற்ற வழிபறி கள்வரைப் போன்றது. எத்தனையோ கவலைகளையும், துன்பங்களையும் துணைக்கொண்டு எங்கள் குடும்பத்துடன் போராடியது அது. அப்போராட்டத்தில், ஐயோ! என் தந்தையல்லவா பலியானூர். அன்றியும் அது என் தலைமேலல்லவா பெரிய பொறுப்பைச் சுமத்திவிட்டது. 'உன் தாயையும் தங்கையையும் காப்பாற்றுவது. உன் பொறுப்பாகி விட்டதே' என்று மனச்சாட்சி அடித்துக்கொண்டது. தாய்ப் பறவை கொடுத்த உணவை உண்டுகொண்டு, தாயின் அணைப்பிலேயே வளர்ந்து, வெளியுலகை யறியாதிருந்த குஞ்சை, உணவு தேடும்படி நிர்ப்பந்தப் படுத்திய காலம். இதுதான் அன்றைய என் நிலையும்.

நான் 'மேற்படிப்புப் படிக்க வேண்டும்; பலநாட்டு அறிவுச் செல்வங்களைச் சேர்க்கவேண்டும்; என் கிராமத்தைப் புனருத்தாரணம் செய்யவேண்டும்; நாட்டின் பணியில் ஈடுபடவேண்டும்' என்று ஏதேதோ நினைத்திருந்தேன். ஆ! அவையெல்லாம் வெறும் கனவாய் விட்டனவா? மனம் கட்டும் மாளிகைகளெல்லாம் சிறுவர் கட்டும் மண் வீட்டைப் போன்றனவோ? என்ன? எங்கள் குடும்பத்தைப் பிணைத்திருந்த ஒரு இழையின் அறுகை என் வாழ்க்கையையே தாக்கிவிட்டதே.

வேறு வழியின்றித் துப்புக்கெட்ட ஒரேயொரு தொழிலுக்கே லாயக்காக்கும்—இந்தக் கல்வியைத் துணைக்கொண்டு வேலை தேடப் புறப்பட்டேன். எங்கே பார்த்தாலும் உத்தியோகமென்ற பசுத் தோலினுள் லஞ்சமென்ற புலியுள்ளம் பதுங்கிக் கிடந்தது. எல்லாரும் உத்தியோகங்களை ஏலங் கூறி, பணத்துக்காக விற்ருர்கள். பணம்...அது இருந்தால் உத்தியோகமென்ன ஆசைக்கா? மனம் தளர்ந்தது, ஏமாற்றமடைந்தது. எங்கும் பிரதிபலனே தோற்றமளிக்கும்போது சகித்துக்கொள்ள மனம் என்ன தருமரா? அந்த மனச்சலிப்பினூடே ஒரு சோக நாடகமல்லவா தென்படுகிறது; அதையும் பாராமலிருக்க முடியவில்லையே.

'என் தாய் பஞ்சடைந்த கண்களுடன் இரங்கி என்னையே நோக்குகிருள். அந்தப் பார்வை 'தம்பீ, நீதான் துணை, நீயும் இப்படி அயர்ச்சி அடைந்தால்... எங்களுக்கு அன்னமிட்டு, மானம் காப்பாற்றுவது உன துகைதானே' என்று குத்திக் காட்டியது. என் தங்கை கண்ணீர் பெருக்குகிருள். ஒவ்வொரு கண்ணீர்த் துளியும் பெரிய பாருங்கல்போல் என் இருதயத்தை மோதிக் கூவுகிறது; 'அண்ணு, நான் பிறந்து என்ன சுகத்தைக் கண்டேன். உண்ண நல்ல உணவா? உடுக்க நல்ல உடையா? அல்லது ...பெண்ணென்று சமூகம் ஒதுக்கிவிட்டதா? அது எங்களுக்கு ஏதாவதொரு தொழில் சொல்லித் தந்திருந்தால்...அண்ணு... அண்ணு...அண்ணு...'

மனம் துள்ளி எழும்; சோர்வடையும்; அதேசமயம் அந்தச் சோக நாடகமும் தென்படும்; மீண்டும் துள்ளிக் குதித்துப் பொருமும். மனப்பொருமலின் வேகத்தால் நானும் உத்தியோக வேட்டையாடினேன். ஒருநாள் 'அதுவும் கிடைத்தது' பாடசாலை யாசிரியனுக!

* *

அன்று நான் எனது வகுப்பறையில் இருந்தேன்; மாணவர்கள் கணக்குப் போட்டுக்கொண்டிருந்தார்கள்; அவர்களின் கணக்கிலுள்ள பிரச்னையை விடுவித்து விடைகாண முயலுகிருர்கள்; அவர்களின் மனம் அதிலேயே லயித்திருக்கிறது. ஆனல்...நான் ...நான், கால உபாத்தியாயன் கொடுத்த வாழ்வென்ற கணக்கை விடுவித்து விடைகாண முடியாமல் தவிக்கிறேன்; இரண்டே யிரண்டு விடைகள் தோன்றுகின்றன; ஒன்று, உலக சம்பிரதாயம் மனித வாழ்வை நிர்ணயித்து விடுகிறது; மற்றது மனிதனே வாழ்வின் கர்த்தா? அவனே அதை நிர்ணயிக்கிருன்; உலக சம்பிரதாயத்தைத் தகர்த்தெறிய அவனுக்கு உரிமையுண்டு. இந்த விடைகளில் எது சரி அல்லது இவைகள் விடுவிக்க முடியாத புதிர்களோ?

"சார்"—ஒரு மாணவனின் குரல் என் மன ஓட்டத்தைத் தடுத்தது.

"என்னடா"

"சார், இன்ஸ்பெக்ரர் சார், வந்திருக்கார் சார்."

நான் அவர் வந்ததை முன்னமே உணர்ந்திருக்க வேண்டும்; அவர் வந்தவுடன் பள்ளிக்கூடத்தில் திடீரென்று அசாதாரணமான அமைதி நிலவியது; ஆனல் எனக்குத்தான் அஷ்டாவதானமில்லையே.

"அதற்கென்ன சரி போ"—அவன் போய்விட்டான்.

இன்று நானும் இன்ஸ்பெக்டரும் முதன் முறையாக உத்தியோக தோரணையில் சந்திக்கப் போகிறோம். என்ன சொல்வாரோ? செய்வாரோ? மெல்ல மெல்ல ஏக்கம் குடிகொண்டது. என்னுடைய வேலைகளைத் திருப்பிப்பார்த்துக்கொண்டேன்; அவை முன்பே சரியாக விருந்தன; ஆனலும் ஏதாவது பிழையிருந்தால் என்ற ஏக்கம். என்னை நானே சரிப்படுத்திக்கொண்டு அவர் வரவை எதிர்பார்த்திருந்தேன்.

அவர் வரவில்லை......ஆனல்!

வரும்படி அவரிடமிருந்து அறிவித்தல் வந்தது.

'ஏனோ ஏனோ' என்று என் அந்தராத்மா அடித்துக்கொண்டது. எல்லாரும் தோழர்கள் என்று எண்ணும் இந்தக் காலத்திலும் என் மனம் இன்ஸ்பெக்டரைக்கண்டு நடுங்கியது. அந்த நடுக்கம், 'இதுதான் ஆசிரியத் தொழிலில் உன் முதலனுபவம்' என்றது.

நான் போய் நின்றேன்; காலடிச் சத்தம் கேட்டோ என்னவோ அவர் திரும்பிப் பார்த்தார். கண்ணும் கண்ணும் சந்தித்தன; மனமும் மனமும் அறிமுகப்படுத்தப் பிரயத்தனப் பட்டன. அதனல் ஒரு கணநேரத் தயக்கம், இருவருக்கும்.

அவர் முகத்தில் ஒரு புன்சிரிப்பு தெளிந்தது.

என் முகத்திலும் ஒரு புன்சிரிப்பு.

இருவர் புன்சிரிப்பும் மனமும் மனமும் அறிமுகப்படுத்தப்பட்டதன் பிரதிபலிப்புகள். இப்பொழுது என் மனம் மகிழ்ச்சியால் துள்ளியெழுந்தது; முன்பிருந்த ஏக்கம் சுவடேதெரியாமல் மறைந்துவிட்டது.

அதன்பின் அவர் ஒன்றுமே கேட்கவில்லை; நானும் ஒன்றும் சொல்லவில்லை. இருவரிடமும் பொங்கிவந்த மகிழ்ச்சியைக் கடமை தடுத்துவிட்டது. கடமையுணர்ச்சி, அன்பைப் புறக்கணிக்கும்போதுதான் புனிதத்தன்மையடைகிறதோ? அந்த மனேஜர் மாத்திரம் இல்லாதுபோனல் எங்கள் மகிழ்ச்சி எந்தெந்த விதமாக வெளிப்பட்டிருக்குமோ?

இரண்டேயிரண்டு மணித்தியாலங்களில் இருவர் கடமையும் முடிந்தன; சாதாரண மனிதர்களானேம்!

பலவந்தத்தின் பேரில் 'இன்ஸ்பெக்டர்' என்னையும் இழுத்துக்கொண்டு வெளியேறினர்!

மலைநாட்டுத் தெருக்களில் கார் மெதுவாகத்தான் ஓடியது; காற்று குளுகுளுப்பையளித்தது; எங்கள் மனமும் சந்தோஷத்தால் குளிர்ந்திருக்கவேண்டும்; அவர்தான் தொடங்கினர்:

"என்ன, நீ எப்போது இங்கே வந்தாய்?"

"நீ, என்னை விட்டுப் பிரிந்து விடலாமென்று பார்த்தாய்; நான் உன்னைத் தேடிவந்து இவ்விடத்தில் ஒளித்துக்கொண்டேன்."

"எப்போது வந்தாய் என்ருல்......"

"நான், நீ இவ்விடத்தில் வந்து குடியேறியபின்தான் வந்தேன்; வந்து மூன்று மாசமாகிறது."

"ஏன் என்னைப்பற்றி இவ்விடங்களில் விசாரிக்கவில்லை."

"நீ இவ்விடமிருக்கிருய் என்று தெரியாது; அல்லாமலும் கடலாயிருந்தாலல்லவா 'சுழி' யோடியாவது தேடலாம்.

— சு. வே. —

"போடா மாசு; இப்படி நன்ருகப்பேச எங்கே கற்றுக் கொண்டாயடா."

"எல்லாம் உன்னிடத்திற்தான்; சிறுவயதில் நீ கற்றுக் கொடுத்ததுதானே" பேச்சின் நடுவில் சில சம்பவங்கள் தட்டும்போது, நினைவு மூடுபனி போல் அவைகளில் மூடிக்கொண்டு அதிலேயே நிலைகுத்தி நின்றுவிடுகிறது. அதனல் அவன் ஒன்றும் பேசவில்லை; அவன் முகமலர்ச்சி புன்சிரிப்பாய் முகத்தில் தவழ, காரை ஒரு திருப்பத்தில் அநாயாசமாகத் திருப்பிக்கொண்டு போனன்.

வெள்ளாடு போகிற போக்கிலே அங்கொன்றும். இங்கொன்றுமாகப் பல தழைகளைத் தின்னுகிறது. அதுபோன்ற மன நிலைதான் ஒருவரையொருவர் பிரிந்து சந்திக்கும்போதும் ஏற்படுகிறது. என் பேச்சும் ஒரு கோணத்திலிருந்து வேமெுரு கோணத்துக்குத் திரும்பியது.

"நடராஜ் எல்லாரும் க்ஷேமந்தானே."

இதன்பிறகுதான் நான் ஏன் அந்தக் கேள்வியைக் கேட்டேன் என்று நினைத்தேன். நான் கேட்ட அதே கேள்வி, அவன் வாய் மூலமாக வெளிப்பட்டு, என் மீது விஷபாணம்போல் தாக்கிச் சோகநிழலைக் காட்டும் என்பதை நான் ஏன் உணரவில்லை.

"ஓ! எல்லாரும் க்ஷேமந்தான், உன்வீட்டில்" என்ருன் நடராஜன்.

"ம்...என் வீடா" என்னையுமறியாமல் சீறிவந்த பெருமூச்சு நிலைமையை அவனுக்குக் காட்டியது.

"என்னடா, சொல்லேன்" அவன் பதைபதைப்போடு கேட்டான்.

"எதைச் சொல்வேன்? என் தந்தை யிறந்ததும், என் படிப்பு ஏன்? மனமே முறிந்துபோக, விதவையான என் தாயும் தங்கையுமுள்ள குடும்பத்தின் தலைவன் நான். போதுமா?

"இச்...ச்...ச்...எனக்கொன்றும் தெரியாதே."

"உனக்கெப்படித்தான் தெரிய முடியும்."

ஒரு இடத்தில் தேக்கங்கண்ட வெள்ளம் ஏதோ ஒரு இடத்தை உடைத்துப் பெருகும். இந்தச் சம்பவத்தில் சோகம் நிறைந்த என துள்ளம் பேச்சுக்கு வேறு வழியாகத் திரும்பியது.

"உனது அப்பா இப்போது என்னசெய்கிருர்" என்றேன்.

"வேண்டாம் வேண்டாமென்ருல் கேட்டால்தானே; மளிகைக் கடை போட்டிருக்கார்; சுயமாக உழைக்க வேண்டுமாம்."

"ம்...ம்...அதுவும் நல்லது தானே—சாரதா.

"ஏண்டா சாரதாவை இன்னும் மறக்கவில்லையா? அவள் 'கொன்வென்'டில்படிப்பிக்கிருள்.

"விவாகம்...?"

"அதுவா? யாருக்கு? எனக்கு இரண்டு பிள்ளைகளடா?"

"இல்லை உன் தங்கைக்கு..." ஏனே தெரியாது இந்தக் கேள்வியை நான் கேட்கவேண்டும்; மனக் குறுகுறுப்புச்செய்த வேலை, அதற்கு அவன் பதில் இப்படியா வரவேண்டும்?"

"அவளுக்கு ஆகவில்லை; நீ இருக்கும்போது எனக்கு என்ன பயம்?"

"என்ன நீ எல்லாமறிந்த பிரகஸ்பதியோ?"

"பிரகஸ்பதி யில்லாவிட்டாலும் சிலர் மனதையறிய என்னல் முடியும்."

"மனமாம், அதையறிவாராம்;" நான் சிரித்தேன்.

அவனும் சிரித்துக்கொண்டே காரை நிறுத்தினன்.

"என்ன என்றேன்" திகைப்போடு.

"இதுதான் இடம்; உன்வீடு..."

"என்வீடா?"

"ஏண்டா அப்படிக் கேட்கிருய்; உன் சிநேகிதன் வீடு உன் வீடல்லாமல் வேறுயார் வீடாம்... அல்லாமலும்."

"என்ன"

"அல்லாமலும் உனக்குக் கிடைக்கப்போகிற வீடாச்சே" என்று சொல்லி என் முகத்தைக் குறிப்பாகப் பார்த்தான்.

"போதும் போதும், யாராவது கேட்கப்போகிருர்களே" என்று சொல்லிக்கொண்டு காரைவிட்டு இறங்கினேன். நடராஜன் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனன். "அப்பா அப்பா மாசிலாமணி வந்திருக்கிருன். இங்கே வந்து பாருங்கள்" என்று சிறு குழந்தையைப்போல் கூவினன், அவன் மகிழ்ச்சி எல்லை மீறியது.

* *

நீண்டநாட் பிரிவு மறதியாக மாறிவிடும்; ஆனல் சூக்ஷுமமாகவே பாசஊற்றும் சுரந்து பெருகிக்கொண்டே யிருக்கும் பல வருடங்களின்பின் நடராஜன் குடும்பத்தாரைச் சந்தித்த எனக்கு இவ்வனுபவம் உண்மையாயிற்று. அன்புடையவர்களைப் பிரிந்து கூடும்போது ஏற்படும் சந்தோஷ அனுபவம் என்வரண்டுபோன மனதில் இன்பத்தைச் சுரப்பித்தது.

இந்தப் பழக்கம் சிலசமயம் காந்தத்தைப்போல மாறிவிடுகிறது. தொடர்புடையவர்களிடத்து மனமென்ற இரும்புத் துணுக்கை இழுத்துக்கொண்டு போய் விடுகிறது; நானும் நடராஜன் வீட்டுக்கு அடிக்கடி போகவேண்டிய நிர்ப்பந்தம்—இல்லை—ஏதோ ஒரு சக்தி ஏற்பட்டிருந்தது; இன்றும் அவன் வீட்டுக்குப் போக வேண்டும்.

ஆனல்......

இந்தச் சனி ஞாயிறுகள்...

முன்பெல்லாம் மெல்லிய இன்ப அலைகளைத் தெறிக்க விட்ட சனி ஞாயிறுகள் இன்று... இப்பொழுது...?

முன்பெல்லாம் சனி ஞாயிறுகளில் மனம் பறந்தோடி நடராஜன் வீட்டை யடைந்துவிடுமே?

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

விஜய குமாரன்


*

அடுத்த வாரம் விஜயம் செய்வான்



'சினிமா நட்சத்திரத்தின் வனப்பு மிக்க சருமத்தைப்போல என் சருமத்தையும் உண்மையாகவே லக்ஸ் டாய்லட் சோப் இருக்கச்செய்கிறது"

அவள் தனது அழகிய சருமத்தை முக்கியமாகக் கருதுகிருள். அதனுலேயே சினிமா நட்சத்திரங்களின் புத்திமதியைப் பின்பற்றி லக்ஸ் டாய்லட் சோப் உபயோகிக்கிருள் இச்சோப்பின் வெண்மையான சுகந்தநுரை சருமத்தைச் சுத்தம் செய்து மிருதுவாகவும், மென்மையாகவும் வைத்துக் கொள்கிறது. நீங்களும் லக்ஸ் டாய்லட் சோப்பின் பதமான அழகுமுறையை கையாண்டு உங்கள் சருமத்தையும் அழகு மிக்கதாக வைத்துக்கொள்ளலாம்.




லக்ஸ்
டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப்

LTS 188-172-40 TM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The
# EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, Dec. 5, 1948 | No. 20

## காலமும் விஞ்ஞானமும்

கோவை திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் மாளிகையில், விஞ்ஞானி சேர் சி. வி. இராமன் அவர்கள் 'காலமும் விஞ்ஞானமும்' என்பதுபற்றி சமீபத்தில் அரியதோர் சொற்பொழிவு ஆற்றியிருந்தார். காலம் யாவரையுங் கேட்காமல் போய்க் கொண்டிருக்கிறது. எனவே இன்றே ஏதாவது ஒன்றை நன்றே செய்யவேண்டுமென்பதை அவர் வற்புறுத்துகின்ருர்.

காலத்தை முக்கியமாகக் கருதுவதில்லை என்ற குறை இந்திய மக்கள்பால் உண்டு. காலத்தைப் பயன்படுத்தத் தெரியாதவர்கள், மிக அழகான கடிகாரங்களை வைத்திருப்பதை நாம் காண்கிருேம். சொற்பொழிவு ஆற்றுபவர்களின் நேரத்தைக் குறைப்பதற்கே கண்டுபிடிக்கப்பட்ட கருவியே கடிகாரம். கப்பல்களின் போக்குவரத்து நேரத்தை நிர்ணயிக்க முதன் முதலிற் கடிகாரம் பயன படுத்தப் பட்டது. இதனுல், பிரிட்டிஷாரின் கப்பலோட்டம் அபிவிருத்தி பெற்றதுடன், கால நிர்ணய இயந்திரமும் வளர்ச்சி பெற்றது. நேரத்தை மிச்சப் படுத்த, சொல்ல முடியாத அளவுக்கு இப்பொழுது ஆராச்சிகள் செய்யப் பட்டிருக்கின்றன.

அமெரிக்காவில் உணவு, பால், தேன் முதலிய எதற்கும் பங்கீடு கிடையாது. காலம் மட்டுந்தான் பங்கீடு செய்யப் பட்டிருக்கிறது. இந்தச் செயலை இந்த நேரத்திற்குள் முடித்துவிட வேண்டுமென்பது அங்கு வாழ்க்கை நியதியாக இருக்கிறது. காலம் என்பது அமெரிக்காவில் விலையுயர்ந்த ஒரு சரக்கு.

காலமும் இடமும் ஒன்ருேடொன்று தொடர்புள்ளவை. இழந்த இடத்தைத் திரும்பப் பெறலாம். ஆனுல், வீணுக்கப்பட்ட காலத்தை மீண்டும் பெறமுடியாது. காலம் உயர்ந்த தென்ருல், இரவும் பகலும் ஓய்வின்றி உழைக்கவேண்டுமென்று இதற்குப் பொருளல்ல. வெற்றியின் நுட்பமும், ஓய்வின்றி உழைப்பதில் இல்லை. காலத்தை ஒழுங்காக வரையறுப்பதில் தான் இருக்கிறது.

எவ்வளவுதான் உயர்ந்த செயலாயினும் அதையும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் ஆரம்பிக்க வேண்டும்; குறிப்பிட்ட நேரத்தோடு முடிக்க வேண்டும். இல்லையேல், மனிதனுக்கு வாழ்க்கை சிக்கலாகி விடும்.

வான வெளித் தோற்றங்களிலிருந்து நமக்கு காலத்தைப்பற்றிய ஒரு உண்மை கிடைத்திருக்கின்றது. அது, காலமும் இடமும ஒன்றையொன்று தொட்டு நிற்கின்றன என்பதாம். காலத்தை, ஒரு நகரும் பொருளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். இந்த உலகில் எந்த ஒன்றும் வானத்தின் சூழ்நிலையோடு தொடர்பு கொண்டிருக்கிறது. உலகம் எப்போது தோன்றியது; அது எப்போது அழியும்; என்பவற்றை திட்டமிட்டுக் கூறமுடியுமா? ஒரு போதும் முடியாது. இது, உலகத் தோற்றத்தின் ஒரு அற்புதம்.

உலகத்தின் வரையறுத்துக் கூறமுடியாத ஆயுளை நோக்கும்போது. நமக்குக் கிடைத்துள்ள காலம் மிகச் சொற்பம். அதை நாம் நல்ல முறையில் பயன்படுத்தவேண்டும். எல்லையற்ற தொல்லைகள் நிறைந்த இவ்வுலகை சிறிதளவாவது களிப்படையச் செய்ய முயலாத ஒவ்வொரு நாளும் வீண் நாளாகும்.

நாம் பெரிய விஷயங்களைப் பற்றிக் கவலைப்படாமல் சிறிய விஷயங்களில் கவனத்தைச் செலுத்தவேண்டும். பெரிய விஷயங்கள் தம்மைத் தாமே கவனித்துக் கொள்ளும். ஒரு விநாடியில் ஒரு நல்ல காரியத்தைச் செய்தால், 3600 விநாடிகள்கொண்ட ஒரு மணியில் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்யலாமல்லவா? காலம் யாரையும் கேட்காமல் போய்க் கொண்டிருக்கிறது. எனவே இப்பொழுதே ஏதாவது நல்லது செய்வோமாக!




## மன நிழல்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று...?

அதற்கு உற்சாகமே யில்லை. ஏதோ நீயினுல் வாண்டுபோய் வலியெடுத்தது; வலியைப் பகிர மூளையும் சோர்ந்தது; மூளை வலித்தது.

அந்தத் தீ...!

ஆம்; எனக்குத் தீயைப்போலத்தான்—கொடுநெருப்பு

அது ஒரு வாக்கியம்; அதை எவ்விதத்திலும் மறக்க முடியவில்லையே.

ஒரு சனிக்கிழமை. நடராஜனும் அவன் தந்தையும் பேசிக் கொண்டிருந்தார்கள். நான் அவ்விடமில்லை; பக்கத்தறையில் படுத்திருந்தேன். சுவரையும் ஊடுருவி அந்த வார்த்தை வந்தது' ஏன் வந்தது?

அந்த வார்த்தை என்செவியில் ஏறவேண்டுமென்ற தெய்வ சங்கல்பமிருந்ததோ? வைதீகத்தின் ஆழத்திலிருந்து பிறந்த வார்த்தையிலுள்ள கடுமையோ? அழுத்தமோ?

"தீண்டாச் சாதியான் வீட்டில் சாப்பிடுபவனுக்குப் பெண்ணு? நான் 'அவளை'—சாரதாவை—தெருவில் போகும் பிச்சைக்காரனுக்குக் கொடுப்பேன்." அந்தக் கொடு வார்த்தை இன்னும் என் காதில் சுழல்கிறதே.

அப்பொழுது நடராஜன் என்ன நினைத்திருப்பான்? 'மாசிலாமணி—நான்—ஆழ்ந்த தூக்கத்திலிருப்பான், இவைகளை எங்கே கேட்க்கப்போகிருன்' என்று எண்ணியிருப்பான்.

பாவம்! அவனுக்கு என்ன தெரியும்; அந்த வார்த்தை என்னுள் எதுவிதமான அடிஅடிப்பை ஏற்படுத்திவிட்டது என்று. அதுதானே என் மனவட்டைத் திறந்து சாயாவுருக்களையும் காட்டியது.

"டக்...டக்...டக்"

வேறொரு கோணத்தில் பாந்த சுழலுருக்கள் மறைந்தன. மனம் கயநிலைக்கு வந்தது.

கதவைத் திறந்தேன்.

(தொடரும்)

## மின்னி முழங்கிற்று

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கின்றனர். இவர்கள் தங்கள் கட்டளைகளைச் சிரமேற்கொண்டொழுகும் ஒரு சில அரசாங்க ஊழியர்களின் உதவியுடன், போலிக் கலைவளர்ச்சியில் ஈடுபட்டுவிட்டனர்!! இவர்கள் கூட்டங்கள் கூடித் தங்கள் பக்த கூட்டத்தினருக்கே 'கலைவரும்' என்று பிரசாரஞ் செய்கின்றனர். முத்தமிழ்க் கலாரத்தினங்கள் மலிந்த இலங்கையில் இன்னும் எத்தனையோ அற்புதங்கள் நடைபெறப்போகின்றன. சந்தேகமில்லை.

### தமிழ் நாவலர்

சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பு விவேகானந்தசபையார் நாவலர் குருபூசையைக் கொண்டாடினர். இவ்விழாவின் போது யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் உபந்நியாசம் செய்வார்கள் என்றசெய்தியை மூன்று மாதகாலத்திற்கு முன்னரே அறிந்திருந்தேன். அன்று பேசிய பண்டிதர் கணபதிப்பிள்ளையவர்கள் புதிய சிக்கல்களைக் கிளப்பி யிருப்பதுடன் சில உண்மைகளையுங் கூறினுர். மணிமேகலையை இயற்றிய கூலவாணிகன் சாத்தனுர் வேறு, சீத்தலைச் சாத்தனுர் வேறு. ஆனுல் கலாநிதி உ. வே. சாமிநாதையர் அவர்கள் இருவரும் ஒருவரே யெனத் தெரிவித்துள்ளார். இது தவறெனப் பண்டிதர் கூறினுர். பின்னர், ஐந்தாங் குரவர் பற்றியும் பண்டிதர் ஆராய்ந்தார்.

முதலியார் எஸ். சின்னத்தம்பி, கொக்குவில் திரு. த. குமாரசுவாமிப்பிள்ளைபோன்ற தமிழறிஞர்களும் இனியசொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

### ஹரிஜனர் விசாரணை

ஹரிஜனங்களின் குறைகளை விசாரித்து அவற்றை அகற்றுவதற்கு எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்பதை விசாரணை செய்வதற்கான ஒரு சபையை நியமிக்கவேண்டுமென, மேற்சபை அங்கத்தவர் முதலியார் ஏ. பீ. இராஜேந்திரா சமர்ப்பித்த பிரேரணை நிறைவேறியது.

### இலங்கை விஞ்ஞான சங்க மகாநாடு

"வாழ்க்கையில் எவ்வித பற்றுமின்றி உண்மை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தாங்கள் செய்யும் காரியங்களின் பலாபலன்களைப் பற்றிச் சிறிதும் சிந்தியாமல் ஞானத்தைத் தேடும். ஒரு துறவி என்ற முறையிற்ருன் விஞ்ஞானி ஒருவர் என்னைக் கவர்ந்து விடுகிருர்" என்று நிதி மந்திரி ஸ்ரீ: ஜே. ஆர். ஜயவர்த்தனு இலங்கை விஞ்ஞான சங்கத்தின் நான்காவது வருடாந்த மகாநாட்டை ஆரம்பித்துவைத்துப் பேசுகையிற் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டிதெற்கு திருமகள் நிலையம் நா. பொன்னையா அவர்களால் சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் 1948-ம் ஆ டிசம்பர் மீ 5உ ஞாயிறுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org